T
6572

6572

உ

சடவுர் துணை.

தன்வந்திரிபகவான்

திருவாய்மலர்ந்தருளிய

# பாலவாகடமென்னும்

# சிமிட்டிரத்தினச்சுருக்கம்.

## ௫௱௬௰.

இஃது,

மணிமங்கலம்

வடிவேலுமுதலியாரவர்களால்

பரிசோதித்து,

மதுரை புதுமண்டபம் புஸ்தகஷாப்.

P. N. C. கடைகாரியம்,

N. குருசாமிநாயுடு அவர்களால்

சென்னை

பிடாரித்தாங்கல்

நாராயணசாமிமுதலியார்குமாரர்

சிதம்பரமுதலியாரவர்களது

வித்தியாரத்நாகர அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1903.

சென்னைபிரம்பூர்குயப்பேட்டை 65 வது, நெம்பர்வீடு.

# விளம்பரம்

சீர்மையிலிருந்து வரவழைக்கப்பட்ட

எங்களுடைய



ரோஜாப்பு மொட்டை

பரிட்சித்து பாருங்கள்.



## ரோஜாப்பு மொட்டு என்பது

# ஒருஷோக்மோதிரம்.

இந்தமோதிரமானது அன்றுஅரும்பி இதழ்மலர்ந்த மொட்டை நடுவில் உடையதுபோல பிரகாசிக்கும் பார்வைக்குமிக்கபகட்டாயும் சோபிதமாயுமிருக்கப்பட்ட 9-போலி ரவைகள்வைத்து இழைத்தது இதுஇங்லாண்டு கெமிகல் கோள்டு யென்னும் ஒருவித லோகத்தாற் செய்து விராகனிடை 8-ரூபா விலையுடைய சுயத்தங்கத்தினால் மேற்பூசலும் பூசப்பட்டது. இந்தமோதிரத்தில் எண்ணைபட்டாலும் ஜலம்பட்டாலும் பளபளப்பு மங்குகிறதில்லை கொஞ்சம் காந்தி குறைந்தபோதிலும் சீமைசுண்ணாம்பு பூசிவைத்து புருஷினால் துடைத்துவிட்டால் மறுபடியும் பிரகாசிக்கும். இந்தமோதிரத்திற்கு ஜெனங்கள் 2,000 ரூபாய் விலையிருக்குமேயென்று மதிப்பிடுவதற்கு அஞ்சமாட்டார்கள்.—இதன் விலை 2-ரூபாய்தான் வி. பி. தபாற்கூலி பிரத்தியேகம்.

8 - மோதிரத்திற்கு மல்பீஸ் இனாம்.

8 - எட்டு மோதிரங்கள் ஒரேதடவையில் வாங்குவோருக்கு நாணயமானதாய் (ஒரு பீஸ் சலவைமல்) அதாவது 20 - கெஜமுடையதான் இனாமாய் அனுப்பப்படும்.

4 - மோதிரத்திற்கு இனாம்.

4 - நாலு மோதிரம் ஒரேதடவையில் வாங்குவோருக்கு சரட்டு பட்டன் ஒருசெட்டு இனாமாய் அனுப்பப்படும்.

என்னுடையமுழுகேட்லாக் வேண்டுமானால் அரையணா ஸ்டாம்பு அனுப்பினால் அனுப்பப்படும்.

வித்யாரத்நாகர அச்சுக்கூடத்தலைவர்

பெரம்பூர் போஸ்டு மதராஸ்.

☞ பி. நா. சிதம்பரமுதலியார்

உ

கடவுள் துணை.

---

தன்வந்திரிபகவான்

திருவாய்மலர்ந்தருளிய

பாலவாகடமென்னும்

# சிமிட்டுரத்தினச்சுருக்கம்,

௫௱௬௰

—)(✠)(—

காப்பு.

கெஜமுகனடிவணங்கிக் கேசரப்பொருளைக்கண்டு
வசமெனவறிவிற்பூண்டு வகையுறச்சிசுவின்ரோகம்
கசைவரக்கனிவதாகக் கண்டுநானுரைக்கவேண்டி
திசைமுனியருளைநோக்கித் திகழ்மலர்போற்றினேனே. ௧

மலர்ப்பதம்வாணிபோற்றி மாநந்திகுருவேபோற்றி
கலர்க்கொடுஅருவேபோற்றிக் கந்தனுங்கைலைபோற்றி
திலர்பெறமுனிகள்போற்றிச் சீர்வடஇந்நூல்போற்றி
குலமெனக்கூறும்நந்தி குருவருளருளேகாப்பே. ௨

வருள்சிசுவாகடத்தை வகுத்துயானுரையாய்ப்பாட
தெருளெனவாமிபாதம் சீர்பெறத்தொழுதேன்காப்பு
மருமலர்சோதிதன்னை மகிழ்வுடனிலகைச்சூழ்ந்த
திருவடிதன்னையானுந் தொண்டனும்பணிந்தேன்காப்பே. ௩

பணிந்துபான்குழந்தைரோகம் பலபலநாமமெல்லாம்
கணித்துநாமறிவாற்கண்டு கரைகண்டுதுறைபிலேடு
துணிந்துமேநூல்கடோறு முறைமுறைசோதித்தேறி
வணிசிசுநோய்மருந்து வகைமுறையுரைப்போமென்னே, ௪

உலரபெறத்தந்தைதாயி னூழ்வினைதொடர்ந்துகூடும்
மலரபெறத்தாயின்ரோக மைந்தனைச்சார்ந்துகூறும்
கரைபெறத்தீனியாலுங் கடந்தோர்கன்மத்தாலும்
பரபரத்தொழிலினாலும் பட்சியின்கிரகக்கூறே. ௫

கூருடன்வருந்தும்ரோகங் குழிப்பிளவுங்கையுண்மை
வாறுடனிதனைப்பார்த்து வையகச்சிகிச்சைசெய்தன்னை
பேர்பெறத்தீர்ப்பாராகில் பிலன்வருந்தர்மகர்மம்
காருடன்மருந்துரோகங் கலந்துசாலுரைப்பேன்கேளே. ௬

## நூல்.

### எண்சீராசிரியவிருத்தம்.

கேளப்பாகருங்கரப்பான் செங்கரப்பான்
கேள்மகனேகருங்கிரந்தி செங்கிரந்தி
தாளவிமன்கரப்பனது சிரசிற்காணும்
தன்மையென்றசெவ்வாப்புச் சிவந்துகாணும்
சேள்கிரந்திசெங்கரப்பா னிதுரண்டாலே
செனித்தநோயெல்லாஞ் செனித்தவாறு
வாளிதெல்லாந்தீர்வதற்கு மருந்துசொல்வேன்
வசனிப்பேனெண்ணெய்தனை வளமாய்ப்பாரே. ௭

(இந்த)கருங்கிரந்தி செங்கிரந்தி பிள்ளைபிறந்த
மூன்றுமாதமட்டுமிருக்கும்
கருங்கிரந்தி செங்கிரந்திக்கு எண்ணெய்

வளமாய்ப்பார்சிற்றாமணக் கெண்ணெய்கால்தான்
வகையுடனேபூவரசன் பூவுங்காயும்
இளமாய்ப்பாரிடித்ததனைச் சாற்கால்கூட்டி
யினிசிவந்தமணித்தக் காளிச்சார்கால்
தளமாய்ப்பார் * கருவாயின்பட்டையேலம்
தன்மையென்றறிவதையொடு கரப்பான்பட்டை
குளமாய்ப்பார் ()குமரிச்சாறரைக்கால்வார்த்து
குஞ்சரமேகடைசரக்கு விராகனென்றே. ௮

* கருவாபட்டை லவங்கப்பட்டை () குமரி கற்றாழை.

ஒன்றாகவிடவையெல்லாம் கலந்தாக்கொண்டு
உத்தமனேகடைசாக்னைச் சூரணித்து
தென்றாகதெளிந்துநன்றா யடுப்பிலேற்றி
தேவிமனோமணிதனைத் தியானஞ்செய்து
கன்றாகக்கணபதியைப் பணிந்துப்போற்றிக்
கடுகேடுத்துபதம்பார்த்து இறக்கிக்கொள்ளு
துன்றாகதொட்டிடைதான் மூன்றுவேளை
தொட்டெடுத்துநாவதனில் புகட்டிப்போடே. கூ

புகட்டியேமேலெல்லாங் கடுகைப்பூசு
பொல்லாதமூன்சொன்ன நோய்களோடும்
வகட்டியேதாய்தனக்கு கவிச்சாகாது
வையகத்தில்பூசினிக்கா யெள்கொள்ளாகா
அகட்டியேயெருமைப்பால் நெய்யாகாது
அம்பாகமற்றதெல்லாம் கூட்டச்சொல்லு
தகட்டியேபதினாறு பிராயமட்டுந்
தன்னையுடன்மங்கைவினால் நோயுண்டாமே. ய

இருவிதகரப்பன்(ங) மாதமட்டும்

(அம்)மூன்றுமாதந்தொடங்கி (க)வருஷமட்டும் தோஷம்
(அவ்)வொருவருஷந்தொடங்கி (ங)வருஷமட்டும்-மாந்தம்
(அம்)மூன்றுவருஷந்தொடங்கி(யக)வருஷமட்டும்-கணம்

இவற்றுற்கிளைத்தரோகம் பற்பலவிதமென பாலவாகடதிரட்டிற்காண்க.

*சூலிகணம்-வேறு.

உண்டாஞ்சூலி கணங்குணங்கேள்
உற்றசுவாச மேலெழும்பி
தண்டாமிருமல் மிகவுண்டாந்
தனைநெஞ்சு வாய்மட்டு
தொண்டைநாவு மிகவெந்து
சோருமொருமி வயிறுப்பும்
வண்டார்முலையுஞ் சூடியாது
வகையாய்முகமும் நாறுமென்றே யக

*சூலிகணம் கர்ப்பக்கணம்.

## சூலிகணத்துக்கெண்ணெய்.

முகமாயெண்ணெய்க்கால்படிதான் முகிழ்சேர்துளசிச்சாற்காலாம்
தகமாய்கிலத்தின் துளசிச்சாற் றன்னையரைக்காற்படிகூட்டு
வகமாங்கஞ்சாங்கோரையுடன் வணமைமாசிப்பத்திரியும்
ஆகமாம்வில்வம்உள்ளியுடன் அன்பாயிடித்துச்சார்பிழிந்தே. ௰௨

அன்பாயரைக்கால்வகைக்குபடி யளந்துநிறுத்துஒன்றாக்கி
வன்பாய் * திரிகடுகுடனேதான் வறுத்திடித்துசூரணஞ்செய்
தென்பாயிரண்டுவிராகனெடை தேனும்வார்த்துக்கலந்துவிடு
உண்பாய்எண்ணெய் அடுப்பேற்றி யுருளுங்கடுகுபதந்தனிலே. ௰௩

தனிலேயிந்தகடைமருந்தை தயவாய்ப்போட்டுக்கிண்டிடுநீ
வனியேயிறக்கிகணபதியை வலகையாய்த்தொழுதுஅடிவணங்கி
மனியேசூதிகணந்தனக்கு மைந்தன்தாயைச்சாந்திசெய்து
தொனியேமைந்தன்தொண்டைதனில் தொடுநீகாசுஎடைரண்டே. ௰௪

எடையேஐந்துமாதமென்றால் எண்ணெய்ஐந்துநாள்மட்டும்
தடையாயிச்சாபத்யமது தனதாய்பிராயம்ஐந்துமட்டும்
இடையாயிருக்குஞ்சூலிகணம் இதனைக்கண்டுத்திகத்திடுகாண்
படையாய்வருஷம்ஆனகணம் பலிக்குமொருமண்டலங்கொள்ளே. ௰௫

## முக்குகணத்தின்குணம்.

கொள்ளமுக்குகணங்குணங்கேள் குழந்தைநாவுமிகவெந்து
தள்ளாச்சுரமுந்தலைவலியுந் தாகமுடனேநாவறண்டு
மெள்ளவயிற்றுக்கடுப்புடனே மேனிகறுத்துஆசனமும்
விள்ளஇரத்தமாய்விழுந்து வீணில்தேகம்வற்றுமென்றே. ௰௬

## முக்குகணத்திற்கெண்ணெய்.

வற்றவில்வம்விலாமிச்சு வகையாய்விஷ்ணுக்காந்தியுடன்
*முத்தாஒரிதழ்தாமரையும் முருங்கைவித்துத்துளசிவேர
கற்றக்கோங்குப்பிசின்ஞேடே கனத்தாவாரைப்பிசின்கூட்டி
அத்தங்கோஷ்ட* மதுரமுடன் அக்காரகாரந்தாளிசமே. ௰௭

*முத்தம்-கோரைக்கிழங்கு-மதுரம் அதிமதுரம்.

தாளிசம்எண்ணெய்நாழி தளர்பெருமருந்தெல்லாந்தான்
வாளிசம்வறுத்திடித்து வகைக்கியோர்பலமேசேரு

மாளிசங் * குமரிச்சாற்கால் வகைமுலைப்பால்காலாகும்
ஆளிசம்படிபரைக்கால் அழகுள () நிம்பச்சாறே. ௰௮

* குமரி கற்றாழை() நிம்பம்-எலுமிச்சம்பழம்

சாறிதுஎண்ணெயொன்றாய் சமாசமாகலந்துக்கொண்டு
வாரிதுஅடுப்பிலேற்றி வகையதாய்த்தீயைமூட்டி
காரிதுகடுகுகண்டால் கழிகநீயிறக்கிக்கொண்டு
மாரிதுவடுகன்பூசை மனோன்மணிப்பூசைசெய்யே. ௰௯

செய்துநீயெடுத்துக்கொண்டு செயம்பெறதுட்டடைத்தான்
வைதுநீவைத்துவாயில் வகைமூன்றுநாள்தான்வாரு
கைதுநீஇண்டந்தண்டைக் கண்டமாய்நறுக்கிக்கொண்டு
மையிதுநீசிரகத்தை மலர்ந்திடபொரித்துக்கொள்ளே. ௨௰

பொரித்துநீயிண்டந்தண்டை பொருமையாயூதிப்போட்டு
தரித்துநீயதனிற்போட்டு தண்ணீர்காற்படிதான்வார்த்து
வறுத்துநீயெட்டொன்றாக்கி வார்ப்பதுமூன்றுவேளை
தெறிக்குமேகண்முன்சொன்ன தெல்லாந்தானோடிப்போமே. ௨௧

ஓடிடும்ஐந்துவேளை யுறுதியாய்க்குடிக்கச்சொல்லு
வாடிடும்உதயவேளை வசனித்தஎண்ணெய்நீ
ஆடிடும்அவிழ்தந்தன்னால் அடங்கிடும்நோயெல்லாந்தான்
தேடிடும்தருமம்வந்து சிக்கெனஎய்துந்தானே. ௨௨

ஊதுமாந்தகணத்தின் குணம்.

தானேயூதுமாந்தகணம் தனதாயுரைப்பேன்மடமயிலே
வானேகாலுங்கண்உடம்பு வளமாய்வீங்கிநாவுபுண்ணாய்
ஆனேகேளாய்ச்சுரம்உண்டாய் அன்னந்தண்ணீர்க்கொள்ளாது
காணேகாலுங்கைசோர்ந்து கனத்தசுவாசம்அதிகமென்றே. ௨௩

அதிகமாயூதுமாந்த கணமதுபனிரண்டாண்டு
அதிகமாம்அந்நாள்மட்டும் ஆமிதுநோயின்காலம்
அதிகமாய்மருந்துகேளாய் அன்புடன்உரைப்பேன்தானே
அதிகமாந்தேவிவாலை யருளினாலுரைப்பேன்கேளே. ௨௪

ஊதுமாந்தகணத்திற்குஎண்ணெய்.

உரைப்பேனெந்தன்குருவருளால் ஓமீறாமுள்ளிநீர்முள்ளி
நிலைப்பேன்இண்டுவேர்க்காயந்தேங்காய்நெற்றுப்பாலுடனே

கரைப்பான்கைபான்கரந்தையுடன் கண்டங்கத்திரிவசம்பேலம்
திரைப்பேன்வெட்பாலரிசியொடு திரிமூர்த்தளம்பழச்சாறே. ௨௫

பழமேவட்டத்திருப்பியுடன் பம்பாடமுமுத்தமொடு
தழமேஒரிதழ்தாமரையும் தண்தாமரையுஞ்செங்கழுநீர்
மழமேகூர்த்தாவாரை வல்லாரையின்தசைசாறுடனே
வழுமேவிளாவின்பிசின்வாகை மருக்காரைப்பிசினுஞ்சேரே. ௨௬

சேரேயிலவம்பிசின்சேரு செக்கத்தாரிமுருக்கன்சார்
மாரேமாசிக்காயுடனே மகிழைகடுக்காய்அதிவிடையம்
சீரேவாலின்மிளகோடு சிவந்தசாதிபத்திரியும்
வாரேயெல்லாம்வகைக்குக்கால் வராகனாய்ப்பொடித்தலொன்றுக்கே. ()

பொடித்திடுமருந்தினோடே புகழ்விளக்கெண்ணெய்வார்த்து
அடுத்ததோர்செப்பிலேற்றி அழகதாய்த்தீயைமூட்டி
வடித்ததுகடுக்கிரண்டால் வளமதாயிறக்கிக்கொண்டு
தடுத்ததோர்தேவிமாகை தயவாய்ப்பூசித்துப்போற்றே. ௨௮

போற்றியெண்ணெய்தன்னைப் புகழ்த்துட்டெடைதானிய
ஆற்றிமூன்றுவேளை அழகதாய்க்கொள்ளச்சொல்லு
மாற்றியபுளிப்புதள்ளு வகையுறபுகையுமாகா
ஏற்றிபகவிச்சுள்ளு இவையெல்லாமகாதென்றே. ௨௯

* ஆமணத்தின்குணம்.

என்றேஆமணக்கின்குணங்கேள் இனிதாய்நெஞ்சுதான்துடிக்கும்
வன்றேசிறுநீர்மஞ்சள்நிறம் வகையாய்ப்புகையுமேல்கடுப்பு
கண்டம்உடம்புநிறம்வேறும் கனமாய்வந்துஒருவேளை
நன்றுப்பெதும்புஞ்சர்வாங்கம் நலமாயிருமையிந்தவென்றே. ௩௰

* ஆமம் சீதக்கட்டு.

மிஞ்சும்வயிற்றில்இரைச்சலுடன் மிகவுந்தாகஞ்சுரமுண்டாம்
கஞ்சமூக்குமேலெழும்பும் கனமாய்சுவாசப்புகையெழும்பி
துஞ்சுமுடம்புமேல்வறண்டு துருப்புபோலேவடிவெடுக்கும்
நெஞ்சும்ஆமரணமிதுதான் கேளாயிக்கோய் * ஓராண்டே. ௩௧

* ஓராண்டு-ஒருவருஷம்.

வேறு

ஆண்டென்ன இடையவேர் இண்டத்தண்டு
அம்பானசாதிலேல நறிவங்கி

பூண்டென்னக்குமிழினொடு மாசிபத்திரி
புங்கினொடுநிலத்துளசி துள்ளிச்சாறு
தாண்டென்னமுடக்கற்றான் தூதளஞ்சார்
தனைதானநுணாஇலையின் சாற்றினோடு
வாண்டென்ன வல்லாரைக் கஞ்சாங்கோரை
வகைக்குஇதுகால்படிச்சாற் வாங்குவாங்கே. ௩௨

வாங்கியேஎண்ணெய்படி ஒன்றுவிட்டு
வகையானசாதிக்காய் ஏலங்கிராம்பு
வாங்கியேகடுகுரோ கணிகடுக்காய்
வால்மிளகுலமுடன் வசம்புசுக்கு
வாங்கியேவகைக்குபலம் நிறுத்துக்கொண்டு
வறுத்துமேதூளிடித்து வகையாய்ச்சேரு
வாங்கியேஆடுப்பேற்றிக் காய்ச்சிக்கொண்டு
வற்றியபின்கடுதிரண்டால் இறைக்கிடாயே. ௩௩

இறக்கிடாய்மனோமணிதன் பூசைசெய்து
ஏகாக்ஷரபூரணத்தை மனதில்போற்றி
இறக்கிடாய்நாளஞ்சு கரண்டிவீதம்
இதமாககொடுத்துவிடு அஞ்சவேண்டாம்
இறக்கிடாய்முன்சொன்ன நோய்களெல்லாம்
எளிதானஆமகணம் பறந்தோடும்
இறக்கிடாய்ஆமகண மாந்தமெல்லாம்
என்னசொல்வேன்தீருமிந்த வித்தைப்பாரே. ௩௪

வித்தைபார்சேஷ்மபண்டம்வாயுபண்டம்
விருப்பமுடன்தள்ளிவிடு இதற்காகாது
வித்தைபார்நிலத்துளசி புட்டவித்து
விதமாகப்பிழிந்தந்தி கொடுத்துவாரீ
வித்தைபார்உதயத்தில் எண்ணெய்வாரு
விபரமாய்அந்தியிலே கியாழமேற்று
வித்தைபார்பிள்ளைவலி ஆமமாந்தம்
விரிட்டோடுமே இதனால்பாரே. ௩௫

இதுநூல்தான்மூந்நூற்று அறுபதுக்குள்
எடுத்தவித்தையாடுமேந்த வாலைநூலு
இதுவானநந்தீசர் கடாட்சத்தாலே
இந்நோயின்விபரமதை மனதாற்கண்டேன்

இதுவானபன்னீரா யிரஞ்சுருக்கி
ஏற்றமுறைசிமிட்டிரத்னச் சுருக்கந்தன்னை
இதுவானதன்வந்திரி யென்றநாமம்
இவ்வுலகில்சுருக்கத்தா லென்பேராச்சே. ௩௬

## சிங்கிமாந்தகணத்தின்குணம்.

### அதே-விஷமாந்தகணம்.

பேரானசிங்கிமாந்தகணத்தைக்கேளு
பெருமையாய்உந்திதனைல் மேலெழும்பி
வாரானாலுமே புண்ணுப்வெந்து
வலுமையாய்சுவாசமேல் இருப்புமாகி
சீரானதிரேகத்தஞ்சமூலம்காய்ந்து
சிவசிவாதழல்போலே சரமும்வீசும்
வீரானசுவாசமது திக்குமுக்காடி
வெருளியாய்மயக்குவிக்குஞ் சிங்கிகணம்பாரே. ௩௭

சிங்கிகணம்பிள்ளைகட்கு சுரமிருந்து
சிவசிவாமாந்தசுர மிதுதானென்பார்
சிங்கிகணமாந்தமிது ஏதென்றக்கால்
சீக்ற்றிப்பதின்மூன்று பிராயமட்டும்
சிங்கிகணமாந்தமிது இருப்பிடந்தான்
சிறுவனென்றபிள்ளைக்குச் சுரந்தானுகும்
சிங்கிகணம்ஒழிவதற்கு அமுர்தாதிதன்னை
க்ஷிணமதிலேவிள்ளுகிறேன் இதனைப்பாரே. ௩௮

## சிங்கிமாந்தகணத்துக்கு அமுர்தாதிகுளிகை.

இதனைப்பார் அதிமதுரம் கோஷ்டம் ஏலம்
இனியகோரோசினையும் சாஸ்திரபேதி
இதனைப்பார்சண்பகப்பூ மாசக்காயும்
இலவங்கப்பூவுடனே வகைக்குக்கால்தான்
இதனைப்பார்இவையெல்லாங் கல்வத்திட்டு
எழில்வெட்டிவேர்மாசிப் பத்திரிவேரும்
இதனைப்பார்கருந்துளசி வீலாமிச்சோடு
இன்பமதாய்நால்வகையுஞ் சாற்பிழிந்தே. ௩௯

பிழிந்துமேகல்வத்தில் வார்த்தரைத்துப்
பிலமாக இருசாமம் விடாமல் ஆட்டு

சுழிந்துமேகுன்றிப்போல் உண்டைசெய்து
கண்மணிபோல்நிழலுலர்த்திச் செப்பில்வைத்து
வழிந்துமேவாலைமனே மணியைப்போற்றி
வகையானமாசிபத்திரிக் கியாழந்தன்னில்
அழிந்துமேகுளிகையொன்று கொடுத்துப்போடு
ஹரஹராமுன்சொன்ன மாந்தம்போமே. ௪௰

மாந்தம்போம்லவங்கப்பூக் கியாழந்தன்னில்
மகத்தானமாந்தசுரம் வாந்திதீரும்
மாந்தம்போம்முலைப்பாலில் கொடுப்பீராகில்
வதைத்துவருங்குடல்பவுன் நீர்ப்பாடுதீரும்
மாந்தம்போம்கரப்பான் நாவறட்சிதீரும்
வயிற்றெரிவு அன்னவிடாய்ச் சுரமுந்தீரும்
மாந்தம்போம்உப்பிசமும் இருமல்போகும்
மகத்துவமாம் அமுர்தமெனுங் குளிகைப்பாரே. ௪௧

கணத்தின் குணம்,

பாரேகணத்தைப்பகரக்கேள் பகருமுடம்பிற்சுரம்வீசும்
பாரேஉட்சுரமிதுதானே பகரும்கணம்மலம்உட்சேரும்
பாரேமார்புகூண்டெழும்பிப் பதமாய்தேகமிகவற்றிப்
பாரேவாயுமிகநாறும் பதமாய்மலமும்வெட்டையென்றே. ௪௨.

மலமும்சலமும்மிகத்தீய்ந்து மார்பிலதிகசுரங்காயும்
மலமும்வயிறுமிகவளியும் வளமாய்த்தலையுமிகமயக்கும்
சலமும்வறள்தீதான்குறையும் சண்டாளம்போல்உட்சுரமும்
தலமேபன்னிரண்டாண்டுமட்டுந் தனதாய்வருகுகணமிதுவே. ௪௩.

கணத்திற்கு—எண்ணெய்,

வேறு.

*கிணமானகிணமிதற்கு மருந்துசொல்வேன்
கிரியையென்றவல்வாரை மாசிபத்திரி
கணமானவில்வமொடு விளாவின்சாறும்
கடியானஅத்திப்பால் ஆலம்பாலும்
திணமானஉள்ளிச்சார் நிம்பச்சாறும்
திறமானமுலைப்பாலும் ஆவின்பாலும்
கிணமான () ஆன்நெய் வெள்ளாட்டின்பாலும்
கேள்சிவந்தகொம்புத்தேன் கொவ்வைச்சாறு, ௪௪

* கணம்—கிணமென மருவியது.

() ஆன்நெய்-பசுவின்நெய்.

சாறிதெல்லாம்வகைக்குபடி அரைதான்வாங்கி
சமர்த்தான * தென்னங்காய்ப் பாலுநாழி
சாறிதெல்லாம்ஒருசட்டித் தனிலேஊற்றிச்
சாதிக்காய்சாதிபத்திரி ஏலங்கிராம்பு
சாறிலே () திரிகடுகு,, திரிபலாதி
சடாமாஞ்சில்அதிவிடையம் மாசிக்காயும்
சாறிலேவகைக்குபலம் ஒன்றுவாங்கிச்
சன்மையாய்த்தூளிடித்து வைத்துக்கொள்ளே. ௪௫

* தென்னங்காய்—தேங்காய்.

() திரிகடுகு—சுக்கு—மிளகு—திப்பிலி.

,, திரிபலாதி-கடுக்காய்-தான்றிக்காய்-நெல்லிக்காய்.

வைத்துக்கேள்சந்தனத்தூள் அருகங்கட்டை
வலுவானவெட்டிவேர் விலாமிச்சோடு
கைத்திறமாயிடித்துவகைப் பலந்தான்வாங்கிக்
கால்படிதான்நீர் அதிலே யிதனைப்போட்டு
வைத்துப்பார்க்கியாழமது பாதிவாங்கி
மகத்தானசாறதிலே யொன்றாய்வார்த்து
வைத்துப்பார்அடுப்பேற்றி எரித்துமேதான்
மச்சமாய்நீர்ச்சுண்டி நெய்போலாமே. ௪௬

நெய்போலாம்பதத்திலே மருந்தைகொட்டி
நேசமுடன்பூரணமாய்க் கிண்டுகிண்டு
நெய்போலாங்குழம்பாகும் பதத்தைக்கண்டு
நேசமாம்இறக்கிவைத்து தேவிதன்னை
நெய்யென்றவாலையைத்தான் போற்றுப்போற்று
நினைவாகலட்சமுறு நீதான்ஓது
நெய்யானநெய்யிதுதான் வலுத்துப்போச்சு
நிகரில்லாசஞ்சீவி யிதுதான்பாரே. ௪௭

பாரேதான்கரண்டிபிரை மண்டலமேகொண்டால்
பாதூரனமுன்சொன்ன கணமெல்லாம்போம்
பாரேதான்வாதத்தா லெழுந்தநோய்கள்
பன்னிபன்னியோடுமே பின்பாராமல்
பாரேநீபுளிகசப்பு வாதபண்டம்
பண்புடனேயாகாது தள்ளிப்போடு

பாரேதான்தேரைகணந் தேரைப்போலே
   பழுதில்லாஎட்டாண்டு மட்டுண்டாமே. ௪௮

உண்டாகும்அந்நோய்க்கு இந்தநெய்யை
   உற்பனமாய்க்கொடுத்துவிடு பறந்துபோகும்
உண்டாகும்வாதபித்த சேஷ்மமூன்றும்
   ஒடுக்கியேமூலத்தில் கணமேயாகி
உண்டாமேயுறுதிபற்றிக் கமலமெல்லாம்
   ஓகோகோபுண்ணாயுட் சுரமும்வீசும்
உண்டாமேயுடம்பிளைக்கும் பித்தவெட்டை
   உத்தமமாய்எரிகுன்மம் உயர்ந்துபோமே. ௪௯

உயர்ந்துபோந்தாதுடைந்து தேகப்பாழாம்
   உற்பனமாய்அன்னரசம் அற்பமாகும்
உயர்ந்துப்போம் ० மூப்பானிரண்டாணடுமட்டும்
   ஓட்டிவிடாதிக்ககணம் ஓகோபாரு
உயர்க்துப்போம்ஆறாண்டு பிராயமட்டும்
   உறுதிபடும்முப்பத்தி ரண்டிற்குள்ளே
உயர்க்துப்போம்இந்நோய்க்கு இந்நெய்யைத்தான்
   உட்கொள்ளமண்டலத்தில் ஓடிப்போமே. ௫௰

० மூப்பானிரண்டு - முப்பத்திரண்டு.

ஓடிப்போம்பத்தியந்தான் இச்சாபத்தியம்
   ஓகோகோநெய்யினுட அதீதமெத்த
ஓடிப்போம்கணரோகம் தேரைக்கூறும்
   உயர்ந்தகணம்இந்தநெய்யில் அயர்ந்துபோகும்
ஓடிப்போம்இந்தவகை ஆருஞ்சொல்லார்
   ஓங்காரபீடத்தின் அதீதப்போக்கு
ஓடிப்போம்யான்உரைத்தேன் எவருஞ்சொல்லார்
   உத்தமியாள்அம்பிகைதன் அதீதம்பாரே. ௫௧

மூலகணத்தின் குணம்.

அதீதம்பார்மூலகணம் ஏதென்றாக்கால்
   ஆஸ்தியிலேவாதபித்தம் அதிகமாகி
அதீதம்பார்சீதமுடன் இரத்தம்ஊற்றும்
   அதில்உளைசேல்ஆசனத்தில் காற்றுமோங்கும்

அதிதம்பார்சுரமுடனே வயிற்றிரைச்சல்
அதிகதலைநோய்வரும் விடாதுபாரு
அதீதம்பார்சண்டாள மூலரோகம்
அதட்டுமேபத்தாண்டு மட்டும்பாரே. ௫௨

மூலகணத்திற்கு கிருதம்.

பார்க்கவே அதிவிடையம் கடுக்காய்சுக்கு
பறங்கிசக்கைகசகசா விலாமிச்சோடு
பார்க்கவேசந்தனத்தூள் சாதிபத்திரி
பண்பானநெல்லியொடு சிற்றுமுட்டி
பார்க்கவேசெம்பருத்தி வில்வவேரும்
பதமாகவகைக்குபலம் நிறுத்திடித்து
பார்க்கவேசூரணித்து வைத்துக்கொண்டு
பண்பானகற்கண்டுப் பலம்இரண்டே. ௫௩

பலமிரண்டாம்ஐந்துபலம் ஆவின்நெய் * சோ
பாலிகையிலேற்றிசட்டி நெய்யைவார்த்து
பலமிரண்டாகொதிக்கையிலே மருந்தைப்போடு
பதமாகசீரகமும் பலந்தான்போடு
பலமிரண்டாங்கற்கண்டைப் பொடித்துத்தூவு
பதம்பார்த்துக்கிண்டிவரில் கிருதமாகும்
பலமிரண்டாம்இம்மருந்தை யிறக்கிக்கொண்டு
பரிவுடனேபூசித்துப் பணித்துபோற்றே. ௫௪

* சோபாலிகை-அடுப்பு.

பணித்துமேபாக்களவுஉள்ளேகொள்ளு
பண்பாகவழுநாள் உண்ணுமபோது
பணித்துமேஓடிவிடும் மூலகணமெல்லாம்
பதராதேபத்தியந்தான் இச்சாபத்தியம்
பணித்துமேமுன்சொன்ன ரோகமெல்லாம்
பஞ்சுபோல்பறந்திடும் பாருபாரு
பணித்துமேஇந்நூலைப் பணியவேணும்
பார்ப்பதுவும்இந்நூலைப் பாருபாரே. ௫௫

மாந்தகுணம்.

வேறு.

பாரேசீதமலமுடனே பதமாய்கழியும்பலவிதமாய்
தேரேகெட்டப்பாலதுபோல் தெளிந்ததண்ணீர்போலவுமே

வாரேகழியுக்குணம்பாரு வளமாய்வுள்ளங்கைகாலும்
நேரேகுளிர்ந்ததண்ணீர்போல் நிசந்தானென்று நான்பாரே. ௫௬

பாரேவெதும்புங்கண்சுழலும் பனிபோல்தேகமிகவேர்க்கும்
பாரேமுகமும்பலவிதமாய் பளிங்குபோலேஒளிமினுக்கும்
பாரேயிந்தக்கூறதனை பருவமறிந்துக்கொண்டெல்லாம்
பாரேயிந்தக்குறிதானே பண்பாய்மாந்தமென் றுரையே. ௫௭

## மாந்தத்திற்கு ரசகர்ப்பூரக்குளிகை.

உரைப்பேன்பூரம்அரைபலந்தான் ஓகோலவங்கம்வலமுடன்
இரைப்பேன்வசம்புசிரகந்தான் திறமாய் * மாசிஅதிவிடையம்
கரைப்பேன்வகைக்குக்கால்பலமாய்க் கனமாய்ப்பூரஞ்சுத்திசெய்து
மரைப்பேன்கல்வம்அதிற்போட்டு மாசிப்பத்திரிவேர்ச்சாறே. ௫௮

* மாசி - மாசிக்காய்.

வேர்ச்சாற்சாமம் ஒன்றரைப்பால் விட்டுணுக்காந்தைச்சாற்சாமம், வேர்ச்சூர்வார்த்து அரைத்துக்கொண்டு விதமாய்க்கொத்துமல்லியைப் போல், வேர்ச்சாற்குளிகை செய்துகொண்டு விளங்குநிழலில்உலர்த்தி யபின், வேர்ச்சார்குளிகை செப்பில்வைத்து வேதப்பொருளைமனதி லெண்ணே. ௫௯

## வேறு.

எண்ணவேகுளிகையொன் றெடுத்துக்கொண்டு
எழிலானமாந்தத்தின் கியாழத்தீய
எண்ணவேஓடிவிடு மாந்தமெல்லாம்
இயம்பினேன்முன்சொன்ன தெல்லாம்போகும்
எண்ணவேயிம்மொழிபோ லார்தான்சொல்வார்
எடுத்தமுறையாடுமிந்த மூன்றாறுபாரு
எண்ணவேமுன்சொன்ன மாந்தமெல்லாம்
என்சொல்வேன்பறந்தோடு மிதனுல்பாரே. ௬௰

## நாமுள்ளின்-தோஷகுணம்.

பாரேநீ அரிவையர்தன் துயரத்தாலும்
பாலனதுமுன்னுளிற் சனிக்கும்போது
ஆரேதான் அந்நாளில் தோஷத்தாலும்
அன்னையுடபசியாலும் வருத்தத்தாலும்

வரரேதான் () குழவிகட்கு நாமுள்தோஷம்
வலுத்துதேஇந்தநோய் வலுமைமெத்த
பாரேதான் இருமல்மிக மேல்மூச்சுண்டாம்
மாசற்றஇருகண்ணீர்ச் சொரியும்பாரே. ௬௧

() குழவி பிள்ளை.

சொரியும்பார்தலைவலியும் சுரமுண்டாகும்
சொற்பனமாய் * பொறிகலங்கி முலையுண்ணாது
அறியும்பார்விலாவிரண்டும் அள்ளெடுக்கும்
ஆ-ஆ-ஆ-வாவெல்லா நாமுள்ளாகும்
வரிபுபார்தொண்டைபற்றி மிகமுள்ளாகி
வலுத்துதேவிதியினுட வலுமைதன்னால்
மரியும்பார்தலைநடுக்கும் பேசொட்டாமல்
மாதொண்டைச்சேஷ்மந்தான் மருவிப்பாரே. ௬௨

* பொறி-மெய்-வாய்-கண்-மூக்குசெவி.

மருவிப்பார்இருகண்ணும் விழித்திருக்கும்
மாயாவசண்டான நாமுள்தோஷம்
மருவிப்பார்இக்குணத்தை அறிந்துக்கொண்டு
மகத்தானநோயிதென்று மனதிலெண்ணி
மருவிப்பார்மனதடங்கிப் பொறுமையாக
வண்மையுடன்நோய்களை சோதித்தேறி
மருவிப்பார்நாமுள்ளின் தோஷங்கண்டு
வருங்குணத்தில் இந்நோய்தான் தீராதென்னே. ௬௩

இதனை நாய்முள்தோஷமெனச்சிலவயித்தியர்சொல்வர்.

(இந்) நாமுள்ளிதோஷத்திற்கு அவுஷதமில்லையெனினும் ஒருவாறுமருந்துசொல்வாம்.

ஒருகடுக்காயைப் பொடிசெய்து கற்றாழஞ்சாறும் சீரகமுமரைத்து வேளைக்கொரு சங்களவுகூட்டத்தீரும்.

வேறு - மருந்து.

சங்கன்கொழுந்து நெருஞ்சிற்பழம் மிளகு தக்காளியிலை பழயமஞ்சள் உள்ளி சமனெடை இவைகளை நருக்கிப்பிழிந்து வேளைக்கொரு சங்களவு புகட்டத்தீரும்.

### செங்கிரந்தியின்குணம்.

தென்செயலால்செங்கிரந்தி வருங்கூறுகேளு
தேசத்திற்*பாலனதுவிழுந்தபோதில்
அன்செயலால்வாயடங்கி விம்மிக்கொண்டு
அழுதகுறல்தான்பூனைகுரல் போலேயாகும்
வன்செயலால்மலங்கட்டி நீருங்க [illegible]ம்
மாயமென்றபிணம்போலே கிடக்கும்பிள்ளை
சின்செயலால்நெற்றியது உயர்ந்துவீங்கும்
சிவசிவாசெங்கிரந்தி யிதுதான்பாரே.

*பாலன்விழுந்தபோதில் பிள்ளைப்பிறந்தவுடனே அன்றியுங்கை கால்சிவப்பேறும்.

### செங்கிரந்திக்குமருந்து.

கோரோசினையை ரோகமில்லாத பரிசுத்தஸ்திரீயின் முலைப்பாலில் இழைத்துக்கொடுக்கவும்.

### வேறுமருந்து.

கர்ப்பூரவள்ளியிலையும் உள்ளியும் குன்றிமணியிலையும் நருக்கிச் சாறுபிழிந்துகொடுக்கவும்.

### வேறுமருந்து.

முருங்கையிலைச்சாறுப்புகட்டலாம்

### செங்கிரந்திக்குக்குளிபபாட்டமருந்து.

வசம்முள்ளியிலையை ஒருபாத்திரத்திற்போட்டு சலம்விட்டுக் காய்ச்சிக் குளிப்பாட்ட செங்கிரந்திதீரும்.

### தீராதஅசாத்திய கருங்கிரந்தியின்குணம்

பாரேநீகருங்கிரந்திக் குணமேதென்றால்
பனிபோலேசீறியழும் முலையுண்ணாது
ஆரோதான்முறிமுறிந்து உடலுபவிம்மும்
அரியகாவறட்சியுடன் கண்விழிக்கும்

வாரேதான்மலாமுகமும்வாடிக்காணும்
வல்வினையாய்* குக்கி புழுவினையும்பாவம்
மாரேதான்மைந்தன் அஞ்சுநாளிற்சாவும்
மஹாகொடிதுகருங்கிரந்தி யுரைத்தோம்நாமே. ௩௫

* குக்கி வயிறு.

அசாத்தியமில்லாத கருங்கிரந்திக்கு அகஸ்தியர்சொன்ன மருந்தை இங்கேசொல்வாம்.

கருங்கிரந்திக்குமருந்து.

ஒணான்ரத்தம் காசெடை (௧) கழுதைப்பால் காசெடை (௧) கூட்டிக்கொடுக்கவும்.

கறுத்தக்கழுதை மூத்திரம் அவரிச்சாறுசமன்கூட்டி வசம்புவுள்ளியுஞ் சரிகூட்டிநருக்கி சிற்றாமணக்கெண்ணையில் எரித்து ஒவ்வொரு காசெடை புகட்டதீரும்.

கருங்கிரந்திக்கு-வேறுஎண்ணெய்.

நெய்விளக்கெண்ணெய் நல்லெண்ணெய் சங்கிலைச்சாறு சமன்விட்டு சுக்குமிளகு திப்பிலி சரியெடை நிறுத்தப்பொடிசெய் தெண்ணெயிற்போட்டு சூரியபுடம்வைத்து ஒவ்வொருபணவெடைப்புகட்டிமேலுக்குந்தடவலையிட்டு ஷெசெப்புள்ளி கிரந்திநாயகம் நீர்விட்டுக்காய்ச்சிக் குளிப்பாட்டத்தீரும்.

மலவாதகுணம்.

உரைப்போங்கேளுமலவாதம் ஓஹோகண்ணின்புருவத்தை
கரைப்போம்நாக்கும்கைகாலும் கனக்குங்குவித துவிண்பார்க்கும்
விரைப்போம்உச்சியடிதங்கி மேலசிழுக யிற்றைவலிப்பிக்கும்
மரைப்போந்தூக்கமஞ்சளிக்கும் வண்டார்முலையுப் விருப்பாதே. ()

வேறு.

விரும்பாதேதமக்கட்டு மலவாதந்தான்
விந்நோய்தான்மலவாத முனிவோர்சொன்னார்
கரும்பாதேமலவாக பித்தகாமனென்று
காட்டினேம் அஸ்வனிவேயகண்டுபாரு

துரும்பாகேவாலரென்ற குழந்தைக்கெல்லாம்
தொடக்குமேயிடுக்கம்வந்து துடித்துப்பின்னும்
விரும்பாதேகண்டத்தில் வெடித்துப்புண்ணாய்
விஷக்கடிபோலவுர்தான் பனிநீர்பாய்ந்தே. ௬௭

## பால்கரப்பான்குணம்.

பனியானவிகாரமுற்று அநீதங்கூறும்
பறபறத்துதேகமெல்லாம்பாற்சொரிபோலாகி
பிணியானசாரையுடல் போலேகாணும்
பிணிவாயில்விஷசலந்தான் உதிரம்போல
தினியானகுலைவற்றித் திருவழிந்து
திசதாதுபீடமெல்லாம் நடுநடுங்கி
வனியான இக்குணங்கட் கண்டுதானால்
வாலகரப்பானிதுவென றியம்பலாமே. ௬௮

## பால்கரப்பானுக்குநெய்.

இயம்பவேயிந்நோய்க்கு நெய்தானொன்று
இன்பமாய்சொல்லுகிறோம் கேளுகேளு
இயம்பவேபூவரசம் பட்டைச்சாறு
இன்பமுடன்தானேயோர் படிதான்ஐயா
இயம்பவேசிற்றாமண் ணெண்ணெய்ஒன்று
இயல்பாகஇவ்விரண்டுஞ் சேர்த்தெரித்து
இயம்பவேகசகசாபால்படிதான்ஒன்று
* இருசீரகத்தின்எடை * கார்கோல்காலே. ௬௯

* இருசீரகம்—நற்சீரகம்—கருஞ்சீரகம்.

* கார்கோல்—கார்கோல்வித்து

காலானஏலமுடன்லவங்கம்* மாஞ்சில்
கரிசாலைநுணாவேரும் வகைபலந்தான்
நீலானநிழலுலர்த்திச் சூரணஞ்செய்
நெடுஞ்சீனிபலம்ஐந்து நிறுத்தொன்றாக்கி
வாலானசாறெண்ணெய் அடுப்பிலேற்றி
வகையுடனேகடுதிரண்டால் சூரணம்போட்

*மாஞ்சில்—சடாமாஞ்சில்.

டேலானுகின்டிசெய்ப் பாகமாக்கி
இறக்கியந்தநெய்தனை வடித்துக்கொள்ளே. எ0

வடித்துமேகவண்டி நிரை உள்ளுக்கேற்ற
வால்கரப்பான் ரோகம் வகைகெட்டோடும்
தடித்துமேவழூரட் கொள்ளும்போது
தவறுணப்புளிசப்பு இரைச்சிமீன்கள்
மடித்துமேஎள்கொள் பாசறகாய்தள்ளு
மற்றதெல்லாம்நோய்க்காகும் மருவிக்கூட்டு
அடித்துமேமேனுக்குக் கடுகைப்பூசு
அசாத்தியசெவ்வாப்பு செங்கரப்பான்போமே. எக

எட்சிதோஷகுணம்,

போமேதான்எட்சிதோஷகுணத்தைக்கேளு
பேரானஉதிரத்தில் சூடுகொண்டு
வாமேதான்மயக்கிவித்துத் தலையெடாமல்
வண்டுமேகண்பீளைக் கட்டிமூடும்
காமேதான்உடல்வற்றிக் கனமேலேமீறுங்
கற்மாதிவினையிதுதான் சிசுகட்கெல்லாம்
ஆமேதான்விதவிதமாய் மேனிவற்றும்
ஆகவுமேஎட்சிதோஷ குணந்தான்பாரே. எஉ

(இவ்) வெட்சிதோஷ குணம் நிவர்த்தியும் ஜல்புரோஷித்தலும்
அஎ-அஅ-அகூ-கூ௰-செய்புளிற்காண்க.

எழுவகைதோற்றக்குறிப்பு.

பரரென்றவயித்தியன் யேகமாச்சு
பருவமாம்ஞானமுதல் சித்திமுத்தி
பாரென்றமனமல்லோ சத்துரூபம்
பலபலகாயமெல்லாம் மனதிலெண்ணும்
பாரென்றஎழுவகையாந் தோற்றந்தன்னில்
பரிகமதிநாற்காலின் ஜன்மத்தோர்க்கு
பாரென்றகோடியிலே ஒருவன் ஐயா
பசுங்குலமாயனிதரவர்மிருகமல்ல. எங

அல்லடா அவன்தனக்கு அறிவோமெத்த
ஆகையிலேசாஸ்திரமோ அவர்க்குக்கிட்டும்

எல்லடாபுதன் அஸ்தம் கன்னிராசி
இதுரண்டுஞ்சன்மக்கூ றவர்க்குமைந்தா
மெல்லடாவழையிலும் எளியோர்மெத்த
யிருகத்தில்தெய்வகணம் அவனும்ஐயா
கல்லடாகற்றோமே யென்றுஎண்ணுள்
கற்றவனைபடுத்தவனுங் கல்விகேட்பான். எச

கல்வியென்றவன்செயலால் நல்லோர்காண்பார்
கற்றவர்கள்பொருளாளி யென்றுசொல்வார்
தெல்வியென்றசித்தனடா இந்திரசித்தன்
கேறினல்சித்தரவர் எதிர்க்கமாட்டார்
மெல்லியவஆண்மையில்லை பொறுமையாளி
மேஷத்தின் அறிவுடையோன் விசுவாசக்காரன்
துல்லியமும்சுழிமூக்கு வலப்புறத்தில்சாய்வு
துடிகொண்ட அவன்வாக்குச் சுழிவாக்கே. எரு

வாக்கானஎன்னூலாஞ் சோதிடத்தில்
வைத்துரைத்தேன் லக்ஷணங்களவலமாய்மெத்த
வாக்கான அம்மொழியை சோதித்தேறி
வழியோடேநடந்தறிவில் வளமாய்நில்லு
வாக்காகபிறந்திறந்து பிறப்பதில்லை
வந்தவழிபுதுபிறப்பு உண்மையுண்மை
வாக்கானகர்மதர்மம் அதிலேதோன்றும்
வாக்குமொழிலக்ஷணங்கள் வளமாய்ப்பாரே. எசு

குளிதோஷகுணம்—வேறு.

பாரேஉச்சிக்கண்ணிரண்டும் பரிவாய்பள்ளம்விழுந்திருக்கும்
சாரேகழிச்சல்மிகவுண்டாம் தணல்போல்தேகம்மிககாயும்
வாரேகுய்யம்புண்ணாகும் வளமாயுடலுமிகவற்றும்
மாரேதுன்பமிகப்படுவார் யனையாள்குளித்தோஷமிதே. எஎ

குளிதோஷநிவர்த்தி—வேறு.

தோஷமிது கழுதாழைக் குட்டிவிளாவேம்பு
சோம்புமஞ்சள்வசம்புடனே சுக்குங்கூட்டி
வாசமிது அரைப்பரைத்து வைத்துக்கொண்டு
வாதையிலேபோட்டுநீர்க் காய்ச்சியேதான்

தேசமிது தாய்ப்பிள்ளை யிருவருக்கும்
கேப்த்துமேமுழுக்காட்டிச் சொல்லுவேன்கேள்
பாசமிது 0 முக்கிணற்றின் தண்ணீர்கொண்டுப்
பசுமஞ்சள் அரைத்ததிலே கலக்கிடாயே. எஅ

0 முக்கிணறு மூன்றுகிணறு.

கலங்கிடாய்மங்ஸ்ரீயும்ஐயும்சவ்வும்
கண்மணியே அறுகாலை நூற்றெட்டோதி
வலக்கிடாய்மேல்தெளித்துக் கடுகவாரு
வாசமுறுந்தேகமோ பசும்பொன்வீசும்
அலக்கிடாய்சூரிவேர்ப் பிடுங்கிவந்து
அன்பாக * பஞ்சநூல் குளிசமாடி
வலக்கிடாய்பாலகனுக்குக் கட்டிப்போடு
மகத்தான்குளிதோஷம் பறந்துபோமே. எகூ

* பஞ்சநூல்—அஞ்சுவிதநூல்.

முட்டுத்தோஷகுணம்.

போமென்றகுழந்தைமேனி பொன்னிறம்வாடிவேறாய்
தாமென்றவயிற்றிற்பாலுந் தங்காமல்வாயால்போகும்
நாமென்றகண்குழிந்து நாக்குவாயக்கருகித்தோன்றும்
காமென்றமரதவிடையின் கன்னியரெடுத்துக்கூறே. அய

முட்டுத்தோஷநிவர்த்தி—வேறு.

கூறானமுன்மந்திரத்தினாலே
குளிர்ந்தசலமொண்டு வேப்பிலையாலோது
ஊரான தாய்ப்பிள்ளை யிருவருக்கும்
ஓதியேயிருவேளை சாந்திசெய்நீ
சீரானதிப்படியே ஏழுநாள்செய்
சிவசிவாபறந்தோடுந் தோஷந்தானும்
வேரானமந்திரமே யதில்வேறில்லை
வெருவானநோயெல்லாம் ஓடிப்போமே. அக

புருஷதோஷகுணம்—வேறு.

போமேஉச்சிக்கண்குழியும் பொருந்துண்பாலுந்தங்காது
போமேவயிறுயச்சென்று பொருமியழுகும்பரவைகால்

தருமேகுறுகும்ஒருவேளை தனியேதனிமேட சிரியழும்
காமேகறுத்தகுழலாளே கருவால்புருஷதோஷமிதே. அசு

## புருஷதோஷநிவாத்தி—வேறு.

புருஷனென்றஉடம்பினுட நாக்குவாங்கிப்
புகழானஎருக்கனூர்க் குளிசமரடி
புருஷனென்றதாய்பூல முன்னை வைத்துப்
புதுமையாய்ப்பூசைசெய்யச் சொல்வேன்சேளு
புருஷனென-ந-ப-சி-ம-நாற்றிறட்டோதி
பூமலையாட்பாக்குக்கட்டுக்கட்டு
புருஷனென்றகுழந்தைகட்குக் கட்டும்போது
புகழ பலிஒன்றுகொடுக்க தோஷம்போமே. அரு

## பட்சிதோஷகுணம்.

தோஷமென்னகுடிக்கப்பால் எதிரெடுக்கும்
தொல்லைவினைகண்மயக்கும் தலைதானேறும்
தோஷமென்னபுளிர்த பாசமாகில்
தொடுவாகஎடுத்தவர்கை யிருக்காபிள்ளை
தோஷமென்னக்கடுகடுத்து வயிறுபோகும்
துறைபோலேகாந்தியதாய் சீதளபேயூறும்
தோஷமென்னபட்சியுட தோஷகுறிதன்னை
சொல்வார்கள்(இக்)குறியைதொடுத்துக்காணே. அசு

## பட்சிதோஷநிவர்த்தி.

காணவேசெப்பேடு தகடுவாங்கி
கண்மணியேஎண்கோணம் அதன்மேல்வட்டம்
பூணவே-சிங்-கிரீயும்-ஸ்ரீயுஞ்சவ்வும்
பூட்டியேஎண்கோணம் அதிலேயூன்று
தோணவேநான்சொல்லுவேன் தருமமாக
தூக்கான-ஐயுமென்று நடுவிற்போடு
மாணவேபோட்டதிலே பஞ்சநாலால்
மகிமையாய்ச்சுற்றி நன்றாய்க் குளிசம்ஆடே. அஞ

ஆடுகிறஉழுந்தோடு அரிசிப்போட்டு
அச்சமறசமைத்துஒரு பாண்டந்தன்னில்

வாடுகிறவருக்கிலையில் சாதம்வைத்து
வளமாசமூவிளக்கு மாவால்வற்றி
நாடமேமந்திரத்தால் நூற்றெட்டோதி
நயமாகசாந்திசெய்து குளிசங்கட்டு
பாடுகிறதிலமையர்ந்த பட்சிதோஷம்
பலத்தநோய்ப்பறந்தோடும் வித்தைதானே. அ௭

எட்சிதோஷகுணம்—வேறு.

வித்தாந்தேகமிகநாறும் மெல்லிமுலைப்பாலருவருக்கும்
சத்தேவயிறுதான்கழியுஞ் சண்டாளம்போல்சுரங்காயும்
த்த்துந்தாயைக்கண்டாலே தவனம்அதுவாய்சிறியமூம்
மற்றுங்கண்ணைப்பிசைந்துபிசைந்து மண்ணிற்புரளும்பாலனுமே அள
மண்ணிற்புரண்டே 0மண்ணைப்போல் மடிந்துமடிந்துதான்புரளும்
சந்நிகுணம்மாந்தமிதுதான் சண்டாளகிசுரோகம்
வெண்ணிவேததன்வந்திரி விளம்பும்இந்நோய்க்கண்டுகொள்
எண்ணிபறக்குப்எட்சியென்ற இயலபாந்தோஷமிதுதானே. அஅ

0 மண்ணை—பேய்.

எட்சிதோஷநிவர்த்தி.

தானேசுக்கிரவாரமதில்தனித்த 0 அசுவகெந்தித்தான்
மானேகாப்புமீதிட்டு-ம-ந-சி-வ-ய-வென்றுருவேற்று
பானேநூற்றெட்டுருவேற்றிப் பண்பாய்வடக்கினவேர்ப்பிடுங்கி
தேனேபட்டுநூல்குளிசமிட்டுத் தேவிநிறுத்தி அருகில்லைவயே. அ௯

0 அசுவகெந்தி—அமுக்கரா.

வையேபூசைநேமமதாய் வாழைக்கனிகள்துபடைத்து
துய்யச்செம்பில்ஜலமொண்டு தோஷநிவர்த்திதான்செய்து
தையல்தேவிதனைநினைந்து தண்ணீர்ஓதிதான்தெளித்து
மையக்குளிசந்தனையெடுத்து மைந்தன்தனக்குக்கட்டிவிடே. ௯0

பறவைதோஷக்குணம்.

கட்டேநெஞ்சில்உண்ணுக்கு கனக்கவீங்கிவளர்ந்திட்டால்
தட்டேபாலுந்தங்காது தானேஉடம்புமிகநாறும்

மட்டேக்கும்பால்தன்னை மார்த்திங்கசப்புபோல்நாறும்
வட்டேகால்கையழுக்கேறி வருத்தும்பறவைதோஷமிதே. ௯௧

வருத்தம்வெள்ளைக்குணறியதை மளமாயப்பசியும்போக்கவிட்டு
மருந்தசாபம்நிவர்த்திசெய்து மகிமைமடக்கின்வேர்வாங்கி
கறுத்தசெவ்வாய்நாளதுதான் ()கனகமதணிந்துளிசமிட்டு
கருத்தகுளிசமதுகட்டிக் கழிப்புங்கூடக்கழித்திடுமே.

() கனகம்-பொன்.

வறட்புள்ளின்தோஷகுணம்.

கழித்தபின்புமேனிவற்றிக் கண்ணின்மணிகள்நீர்சலங்கி
துளிர்த்தத்துளிராய்க்குளிர்ந்துமிக கொண்டநாவுமிகவறண்டு
வழுத்தவேப்பம்பழச்சாறுபோல் வயிறுபோம்விடாதலையசைக்கும்
அழுத்தஉடம்புமிகமெலிந்தும் ஆன்குரல்போல்வெற்றுகுரலே. ௯௩

குரலேகையால்முகந்துடைக்கும் குழறிப்புறங்கையாலுந்துடைக்கும்
வரலேநாவுமிகவறண்டு வாயால்குடிக்கமிகநவிக்கும்
அரலேஅஞ்சிதானழுகும் அன்னந்திரேஷவிடாய்ப்போலே
எரலேஇந்தகுணங்கண்டால் என்றேனும்வறட்புள்தோஷமென்றே.

வறட்புள்தோஷநிவர்த்தி-குளிசம்.

மென்றேவட்ட()-நரிவிரட்டி வியாழந்தன்னிற்காப்பிட்டு
துன்றுஞ்சேவல்பலிகொடுத்து தோஷந்திரவெண்பணிந்து
குன்றிமஞ்சள்அஞ்சோதிக் குழந்தைதாயைக்குளிப்பித்து
மன்றில்வேரைப்பிடுங்கிக்கட்ட வறட்புள்தோஷம்போய்விடுமே. ௯௫

()-நரிவிரட்டி-கிலுகிலுப்பை.

நீர்புள்ளின்தோஷகுணமே.

இடுமேநெஞ்சுதான்வறண்டு இரண்டுகண்ணுமேகுழிந்து
படுமேபாலுங்குடியாது பஞ்சுபோலேகண்வெளுத்து
தொடுமேயலறியிரவுபகல் சுருங்கப்பண்ணிமிகவேர்க்கும்
கெடுமே()கஞ்சமுகமாதேகெடுக்கும் நீர்ப்புள்தோஷமிதே.

நீர்ப்புள்தோஷநிவர்த்தி.

தோஷமுதலைக்கொழுப்போடு துருவட்டத்தாம்பியின்வேர்
மாதேபிதனைக்குளிசமிட்டு மருவப்போட்டுக்கட்டிடவின்

---

() கஞ்சம்-தாமரை

4

ஓமீதோஷமந்திரத்தால் ஒருநூற்றெட்டுச்செபித்திவோய்
பாதேநீர்ப்புஸ்தோஷமது பயந்துப்றந்துஓடிடுமே. ௧௭

## தூக்குபுள்ளின்தோஷகுணம்.

ஓடும்உறக்கம்மயக்கமுடன் ஓஹாவாந்திவயிறிழியும்
பாடுஞ்சிரசுப்பள்ளமதாய் பசுங்காய்மேல்மூச்செறிட்டு
வாடும்பாலன்னஞ்சேரம் வகையாயழுகும்முகம்வெளும்
சூடுமலர்வேல்விழிபாவா தூக்குபுள்ளின்தோஷமிதே. ௧௮

## தூக்குப்புள்ளின்தோஷநிவர்த்தி.

தோஷந்தணிய()ரோசினையும் தூவுமஞ்சள்வசம்பேலம்
வாசவேம்பின்சார்க்கோடு வகையாய்முகம்விளாவட்டணை
பாசமதுவாய் அரைப்பரைத்துப் பாலன்தனக்குமுழுகாட்டிக்
கோசமதுவாயநூற்றெட்டுக் குணமாஞ்சாற்றிதான்செய்யே ௧௯

()-ரோசினை கோரோசினை.

## தீராதோஷகுணம்.

செய்யக்கண்ணுமிகசொருகும் சீதந்தண்ணீராய்க்கழியும்
மையமேகறுப்பாகும் மாங்காய்ப்போலவூசனமாம்
வையதேகமிகஇளைக்கும் வானம்போலேவயிறுகும்
செய்யதோஷமிதுதானே தீராதென்றுதான்உரையே.

## வேறு.

தோஷமிதன்வகையைநன்றாய் சுருக்கிச்சொன்னேம்
தோஷாதிதோஷமெல்லாஞ் சுளுவாய்ச்சொன்னேம்
வேஷமென்றபாவிகளுக் கிந்நூலாகா
வேதாந்ததர்மத்தோர் பார்க்கவேணும்
கூசமென்றகர்மிகளுக் கொடுக்கவேண்டாம்
குணமுள்ளதர்மசீல யோகிக்கீய்நீ
வாசமுள்ள இந்நூலார் கொடுக்கயோனார்
வரிசையாய்க்கற்றோரைப் பணிகுவாயே
பணிவதுவே இந்நூலைப் பார்க்கவேணும்
பணிவதுவும்வயித்தியத்தைப் பணியவேணும்

பணிவதுவும்வயித்தியமே பிரகமூலம்
　　பாராட்டலொன்றுமில்லை பாவிபாவி
பணிவதுவும்மெய்ஞ்ஞானி வயித்தியஞ்செய்வார்
　　பரசித்தர்க்குருசித்தர்வயித்தியஞ்செய்வார்
பணிவதுவும்அறிவாலே வயித்தியஞ்செய்தால்
　　பாவமில்லைதர்ம்மமிது நிமையில்கிட்டும். ௩௨

சகலதோஷநிவர்த்தி.

நிமையானதோஷசர் வாங்கமெல்லாம்
　　நிமைப்போதில்தீர்வதற்கு மூலஞ்சொல்வேன்
வமையான-வ-ந-சி-ம-ய-என்றுதானே
　　வங்-சிங்-என்று-சி-வ-ய-ந-ம-என்ன
துமையானதோஷ நிவர்த்திதானுச்சு
　　சொல்லவும்போகுமோ சூட்சாசூட்சம்
கமையானதோஷ நிவர்த்திதன்னாலே
　　கலைநீக்கிக்காட்சிப் பெறுவாய்தானே. ௩௩

வேறு.

பெறுவாயிந்நூல்மூன்றும்போற் பேசார்பேசார் பெரியோர்கள் கருவாய்க்கண்டுஉரைத்தபடி கண்டுக்கோளென்னூல்மூன்றாறைமறைவைரய்ச்சொன்ன மொழிகளெல்லாம் வற்மத்தைவிரித்திட்டேன் வார், இறவாம்இந்நூல் குழந்தைநோய்கள் தீர்த்திட இந்நூல்பார்த்திட்டீரே.

அன்றியும்.

பட்சிதோஷம்
பறவைதோஷம்
எட்சிதோஷம்
வீங்குப்புள்ளின்தோஷம்
தூங்குப்புள்ளின்தோஷம்
விளக்கொளிக்கண் புள்ளின்தோஷம்
　　இப்பன்னிரண்டு வகைப்புள்ளின் தோஷத்தையும், தாய்தந்தை யிருவராய் பிள்ளைக்கு வந்த

வெங்கண்புள்ளின்தோஷம்
கருடக்கண்புள்ளின்தோஷம்
செங்கண்புள்ளின்தோஷம்
நடைப்புள்ளின்தோஷம்
அந்தப்புள்ளின்தோஷம்
நீர்ப்புள்ளின்தோஷம்
பெண்ணின்தோஷம்
மூட்டுதோஷம்
குளிர்தோஷம்

நோயை பட்சிகளின் தோஷமென அந்நோய்களின் குணக்குறிகளறிவும் பொருட்டு வயித்தியக் குறிஞர் இப்பட்சிகளின் தோஷ குணத்தையும்-அகஸ்தியர்சொன்ன வைகலங்கெப அந்தாதியிற்கர்ப்பமாந்த குணத்தையும் பால வாகடத்திரட்டிற்காண்க,

இத்தன்றி

புருஷதோஷம்
குளித்துப்பெண்கண்டதோஷம்
குளித்தவளொடுநேர்ந்ததோஷம்
கர்ப்பம்அழிந்ததோஷம்
தேரைத்தோஷம்
தீட்டுதோஷம்

(இவ்) வொன்பதுவித தோஷமன்றி-பாலவாகட-ஆ-செய்யுட் கப்புறஞ்சில தோஷகுண முண்டெனக் காண்க.

## தோஷங்கள்வருவிதம்.

அயல்வீடுவாழ்கப்பொருதவள்-எந்நேரமும் அழுகிறவள்கருப்பற்றுநோயியள்-கர்ப்பம் அழிந்தவள்-கள்ளிகள்-கன்னிகள்-கொள்ளிக்கண்ணிகள்-சோரஸ்திரீகள்-பசாசுபிடித்தவள்-பிள்ளையிறந்தவள்-பொய்ச்சாட்சி சொல்லுகிறவள்-மகாகோபியானவள்-மலடிகள்-வந்திகள்-வாழாவெட்டிகள்-விதவைகள்-இவர்கள்-வீட்டுக்கு விலக்கமான நாலாநாள்முழுகி யீரத்தலை யீரப்புடவையுடன் குழந்தைகளைப் பார்த்தால் தோஷம்வரும்,

## வாய்வுபிடிப்புக்குப்பற்று.

தீர்த்திடவாயுபிடிப்புடனே தீரவும்நானோர்பற்றுசொல்வேன்
பார்த்திட0சூதம்விருகன்ரண்டு பண்பான0வங்கப்பொடியிரண்டு
கார்த்திட0ரத்தபாளமுடன் கண்டுபாரங்கிகுன்றிவித்து
கார்த்திடசங்கிவிஆளிவிரை சண்டாளமூதேவிஎட்டிவித்தே. ௱௫

0சூதம்-பாதரசம்0வங்கப்பொடி-ஈயப்பொடி,

0ரத்தபாளம்-மூசாம்பரம்,

வித்தே 0 அண்டவெண்கருவால் விட்டரைசாமம்ஆட்டின பின்பற்றேற நல்லெண்ணெய்க்கொஞ்சம்விட்டு சடாட்சர0காயம் விளகன்போட்டு-மத்தைக்கொண்டு அரைப்பரைத்துமைந்தாவிணைமேல் பூசிடவே-கத்தேகதறியோடிவிடும் கற்பவிணையுடன்உழைவிணையே,

---

0-அண்டம்-கோழிமுட்டை 0 காயம்-பெருங்காயம்,

கற்மப்பிடிப்புவீக்கமுடன் கன்னிபார்க்கர்ப்பக்கால்வீக்கம்
தர்மகுடைச்சல்இடுப்புளைப்பு தண்ணீர்விட்டேங்கிமேகவாயு
மற்மம்அரையின்ஆப்புடனே மகிழ்ந்தநரம்புந்தொடைவாழை
வற்மம்வம்புகுசுவரும் வாராதென்றேயுரைத்தோமே. ௮௭

வாராமற்சகேந்திரவாயுவருகிற குணத்தைபகர்வோங்கேள்
நாராகற்மபாவிகட்கு ஞானந்தெரியாமூடருக்கு
ஏராஇல்லாமழித்தோர்க்கும் எளியோரைநிந்தைசெய்தோற்கும்
தேராமற்சகேந்திரவாயுதெரிந்துத் தெறித்துச்சன்னுமென்றே. ௮௮

சன்னுஞ்சீதளவாயுபண்டம் சண்டாளகார்த்திகைசெவ்வாயில்
விண்ணும்அர்தாளினிற்கொண்டு விருதாவாகமாகவிடாய்ப்
பெண்ணைக்கண்டுமோகமதாய்ப் பொருந்திப்புணர்ந்தபாவிகட்கு
மண்ணில்மற்சகேந்திரவாய்வு மண்டலத்திலேறிநிற்குமென்றே. ௮௯

நிற்கும்பீமனென்றவாயு நீளனுங்குமுறிநிற்குதுபோல-சற்குந்தேக
மொருபுறந்தான சதையைப்போலுஞ்சத்து விலல் - மற்குமடிந்தசெ
த்தைப்போல் மாண்டபிணம் போலேகிடப்பான் பற்குமபாரொரு
கண்சுழலும் பஞ்சடைந்தாப்போல்சாய்வொன்றே. ௯௰

ஒன்றும்வாயுமிகக்குழறும் ஒத்தப்பிணத்திலுஞ்செத்தபிணம்
கன்றுமொருபுறங்கால்கையும் கனத்ததுசதுபோல்கிடக்கும்
பன்றுஞ்சதைதனில்பிறந்தமகா பாபசண்டாளவாய்விதுதான்
தொன்றுமிதுதான்தீர்ப்பதற்கு துவாலைக்கயிலுறைப்பானே. ௯௰௧

மற்சகேந்திரவாயுவுக்கு-எண்ணெய்.

உரைப்பெனெந்தன்குருவருளால் ஒமோமக்காள் உங்களுக்காய்
இறைப்பேன் வேம்பின்எண்ணெயுடன் இச்சிப்பாலும் எட்டிவெண்
ணெய்-கரைப்பேன் கண்டங்கத்திரிப்பால் கருசணவெள்ளைபெருக்கி
ன்பால் உரைப்பேன் குன்றின்வித்தின்பால் ஒக்கச்சரியாய் அடுப்பே
ற்றே. ௯௰௨

ஒக்கஅபினிரோகணியும் ஓமோகாயம் ௦ கோவெண்ணெய்
தக்கச்சரியாய்அரைத்ததைதருவாய்எண்ணெய் அதில்கரைத்து
வெக்கநீர்ப்போகக்காய்ச்சிநன்றாய் வேதாந்தமேதேவிக்குப்பூசைபண்ணி
வக்கமொருபுறம்சூலமதாய் வழித்துத்தேய்த்துதுவாலையிடே. ( )

---

*-கோவெண்ணெய்-பசுவின்வெண்ணெய்.

தேய்த்துமண்டலகாலந்தவிர திரிலோகசெந்தூரம்வைத்துக்கொள்
வேர்த்துமண்டலமதிபூசை மனோன்மணியாளைப்பூசைபண்ணு
வாத்தநோயும்அணுகாது வாராதென்றும்ஓடும்பார்
மேத்துமற்சகேந்திரவாய்வு மிரண்டுமிரண்டோடிடுமே. ௱௧௬

## திரிலோகசெந்தூரம்.

ஓதிற்திரிலோகசெந்தூரந்தேன் ஓமிறாமக்காள்உங்களுக்காய்
தேடும்லோகக்கம்பியதை திறமாய்சுத்தியதைச்செய்து
வாடும் * அண்டோடேடுத்துவந்து வகைதிறமாகசுத்திபண்ணி
நாடுஞ்சுத்தகங்கைவிட்டு நசுக்குபரைத்துதன்மேல்பூசி ௱௧௭

* அண்டஓடு கோழிமுட்டைஓடென்றும் மண்டைஓடென்றுஞ் சொல்வது சிலவயித்தியர்சம்மதம்.

பூசியெட்டிக்கழிவாங்கிபோற்றத் * தருமத்தைசெய்து
வாச * தாரமும் * பொற்றலையும் வகையாய்அரைத்துஅதில்பூசி
மாசகம்பியதிலடைத்து மருவிளட்டிக்கமர் அடைத்து
நுபச்சிலைஅஞ்சுசெய்து எண்ணுறெருவிற்புடம்போடே

*-தவர்த்துளை-*தாரம்-அரிதாரம்.

*-பொற்றலை-பொற்றலைகையாந்தகரை

போட்டெடு அஸ்வனியென்மகனே பேர்பெற்றச்செந்தூரமென
சொல்லுவேன் திட்டச்செந்தூரம் அதிதமெத்தகிரிலோகமெச்சும்இச்
செந்தூரம் காட்டேகானைப்போல் வந்தகற்பமற்சகேந்திர வாய்வோடு
ம் மாட்டேயின்றாலும்பஹோதாம் மாநந்திசொன்ன மகிமையென்றே.

## அதற்குஅநுபான உத்தாமணிலேகியம்.

மாந்தி செந்தூரம்வைத்துக் கொள்ளப்பிமை உத்தாமணிகற்பங்கள்
வானந்த- *வேலிப்பருத்திச்சாற்றைப்பாய் இச்சிச்சாறுடன்கற்றுழை
ஆநந்த*-கேசரிபாலுடனே [illegible] தயிலமுடன்
கானந்தகொம்புத்தேன் [illegible] கண்டுநீர்சேர்த்துவாங்கே ௱௧௮

* வேலிப்பருத்தி-உத்தாமணி*-கேசரிப்பால்-கழுதைப்பால்.

வாங்கியபிப்பிலேற்றியதை வளமைசிறுதியாகமூட்டி
ஆங்கித்*-திரிகடுகுடனேதான் ஆயிரம்ஆண்டுவேம்பின்பட்டை
தாங்கியசன்னராஷ்டமும் சன்னப்பதம்போல்தூளிடித்து
பாங்கியபாகுபதந்தனிலே பதமாய்க்கொட்டிக்கிண்டிவிடே. ௱௧௬

கிண்டிலேகியமதைகொள்ள கேந்திரவாய்வுபறந்திடும்பார்
அண்டிடுநோய்கள்அகன்றோடும் ஆசந்தபேதியருளாதனால்
வண்டிடும்அஸ்வனியென்மகனே விசைபிந்சூரால்பணிந்திடுமக்காள்
சண்டியைப்போல்வந்தவாதம் ரோகசங்கையருமேளன்றோடிடுமே.

சொறிகுஷ்டக்கரப்பான்குணம்.

ஓடிடும்ஆசந்தக்கர்ப்பான் உண்மையதன்விபரஞ்சொல்வோம்
தேடிடுங்கற்மமூடருக்குத் தீயாய்மூளுங்கொள்ளிச்சுண்டன்
பாடிடும்சர்வாங்கமெல்லாம் பஞ்சைப்போலுங்கெச்சையதாம்
நாடிடும்அத்திக்காயதுபோல் காணிலெல்லாமிக வெடித்தே
வெடித்துடன்மிகசீழ்சேலை வெண்மையதுபோல்திரேகமெல்லாம்
படித்துடைந்துடனேமிஞ்சிப்புண் பரவிநிற்குங்கடிபோலே
கடித்துமன்உள்ளங்கருகிநிற்கும் காமப்பிணியுமாகாது
தடிந்துடட்புகுட்டசொறி தணலாயெரியுந்திரேகமென்றே,

சொறிகுஷ்டத்துக்கு-சஞ்சீவிலேகியம்.

வேறு.

ஏரியுமென்ற*-சஞ்சீவிலேகியங்கேள்
என்னசொல்வேன் தேகியத்தின்மார்க்கந்தன்னை.
குறியென்றசஞ்சீவி கொடிதான்வாங்கி
குவலயம்போல்மேல்தோலைப் போக்கிப்போட்டு
சிறியதுண்டாய்வெட்டியதை ரவியுலர்த்தி
சிவசிவாதூளிடித்து வைத்துக்கொண்டு
கரிமுகனைவணங்கியதை சுத்திப்பண்ணி
கரிசாலைஅதற்குநிகர் சூரணமேசேரே

* சஞ்சீவி-சீந்தில்.

இதை-அமுதாதிலேகியமென்பார்

சூரணஞ்சேர்சாதிக்காய் சாதிபத்திரி
சுகந்தமல்லிசண்பகப்பூ கர்க்கடகசிங்கி

சேரணஞ்சேர்குங்குமப்பூ சந்தனத்தூள்
சிறுசாணவெலங்கப்பூ சுக்கோடேலம்
சூரணஞ்சேர்வகைக்குக்கால் பலமேசேர்த்து
சூரணித்துச்சூரணத்தோ டொக்கக்கூட்டி
கோரணஞ்சேர் அஞ்சுபலங் கற்கண்டிட்டு
* கோவெண்ணெய்க்கூட்டியிட்டு அரைத்திடாயே. ௱௨௮

* கோவெண்ணெய்-பசுவின்வெண்ணெய்.

அரைத்திடவே அமுதாகி லேகியந்தான்
ஹரஹராமேகவெட்டை தேககாந்தி
விரைத்திட்டுஓடுமையா விலிகைகுஷ்டம்
விதமான அநுபான முறைசெந்தூரந்தான்
கரைத்திட்டலேகியத்தின் செயநீலாமெத்த
கரைகாணுந்தோடமெல்லாம் அகன்றுபோகும்
உரைத்திட்டஉளைமாந்தை யெண்ணெய்சொல்வேன்
உத்தமனேசிறுநாகம் பெருமருந்தே. ௱௨௯

உளைமாந்தைக்கு-எண்ணெய்.

மருந்தானவசம்பு சீரகமீரண்டு
மைந்தனேசாரத்தம் வேர்ப்பூண்டுக்காயம்
விருந்தானதிருவகைக்குப் பலங்கால்வீதம்
வீண்போதக்காளிச் சாறுவிட்டாட்டி
குருந்தான்எண்ணெய்சேர் அதில்கலக்கி
குருவை அநுமித்தியமும் போற்றிப்போற்றி
திருந்தான் அடுப்பேற்றிக் காய்ச்சிக்கொண்டு
நீமகனேகண்டிநிறை மூன்றுநாளே. ௱௩௰

மூன்றுநாள்வார்த்திடவே உளைமாந்தைதான்
முறிந்துகெட்டோடுமடா உண்மையுண்மை
மூன்றுநாள்பத்தியந்தான் புளிப்புஆகா
முக்கியமாசவமார்த்த எண்ணெய்க்கேது
மூன்றுமை*-வெதுப்படக்கி*-சிறுபச்சரிசி
மூரியாம்*-பீராறி நரையின்சாறு

* வெதுப்படக்கி-பேய்மிரட்டி
*-சிறுபச்சரிசி-சிறுஅம்மான்பச்சரிசி
* பீராறி-எருமுட்டைப்பீராறி

மூன்றான o சாணக்கி சாற்றினோடு
() மூவகைக்குப்படிகாலாய் அளந்துக்கொள்ளே ௱௨௭

o சாணக்கி-நிலத்துளசி.
() மூவகை-மூன்றுவகை.

(௪) வது-அடியிற்கணத்தெண்ணெய்.

அளந்துநாழியெண்ணெயிலே கலந்துக்கொண்டு
அரைபலமாய்வசம் புள்ளி மஞ்சள்சேர்த்து
அளந்தூற்றித்தீய்மூட்டிக்காய்ச்சுக்காய்ச்சு
அடிசட்டிக்கடுகுதிரள இறக்கிக்கொண்டு
அளந்தஎண்ணெய்க்கரண்டிநிரை வார்ப்பீராகில்
அலைந்தோடுமுப்பொழுதில் பத்தியங்கார்
அளந்தஆவாரம்வேர்ச் சரக்கொன்றையின்வேர்
அறிவினுக்காந்திநிலக் குமிழின்வேரே. ௱௨௮

வேரோடுசிறு அம்மான் பச்சரிசிஏலம்
மிகுசீரம் o யானைக்கால் வணங்கிப்பூடு
தாரோடுவகைக்கு அரைபலமும்வாங்கி
தாரணியில்சிற்றேரண் டெண்ணெயொன்றில்
கூரோடு ஆவின்பால் விட்டிழைத்து
குறிசொல்வேன்கலக்கியெண்ணெய்எரித்துவாங்கி
சீரோடுகரண்டிநிரை மண்டலங்காலாக
சிறுஇச்சாபத்தியமாய்க் கொள்ளச்சொல்லே. ௱௨௯

o யானைக்கால்வணங்கிப்பூடு-ஆனைநெருஞ்சல்.

குழந்தைகட்கழிச்சலுக்குநெய்,

கொள்ளவேகணப்பாண்டு கணசுரங்கள்
கொடிதான அஸ்திவேட்டை இருமல்ரத்தம்
கொள்ளவேபரந்தோடும் எண்ணெய்மார்க்கம்
குறிச்சொல்வேன்சிறுபிள்ளைக் கழிச்சல்தோஷம்
கொள்ளவே o உப்பிலியின் பூண்டுவாங்கி
குளமாகநருக்கிஆவின் நெய்யுஞ்சேர்த்து

---

o உப்பிலியின்பூண்டு-உப்பிலிக்கொடி

கொள்ளவேரவிகாய சாமம்நாலு
குருவருளால்பிள்ளைதனக் கீய்ந்திடாயே ௱௩௰

கரப்பான்-எண்ணெய்.

குருவானகழிச்சல்வகையெல்லாந்தீரும்
குணமுண்டாமிவ்வகையிற் கூர்ந்துபாரு
வருகரப்பான்எண்ணெய்தனை வருஷிப்போங்கேள்
வரிகொட்டைக்கரந்தைவேர் செருப்படையின்வேரு
முரியான ० நீலியிலைவிசிரிப்பட்டை
முத்த () கோட்டுக்சாலைப் பட்டையின்தோல்
கரியானமிளகருணை ,, வேலிப்பருத்தி
காரிசாலைபெருங்களாப் பட்டைவேரே. ௱௩௧

० நீலியிலை-அவுரியிலை.
கோட்சாலை-சதைக்கரண்டி
,, வேலிப்பருத்தி-உத்தாமணி

வேரான ஆரைவேரக் ( காணிவேர்பட்டை
விதமான விளாம்பட்டை சிறுகீரையின்வேரு
சீரானவட்டத்திருப்பியின் தன்வேறு
சிவசிவா () புலிதொடக்கிப் பட்டைத்தோலும்
காரானபலம்அரையாய் நிறுத்துவாங்கி
கார்வசம்புபலம்அரையும் அதனோடொக்க
ஆரானஎரண்டம் படிகாலாக
அவ்வகையைத்தூளிடித்து அதனிற்சேரே. ௱௩௨

() புலித்தொடக்கி-இண்டு.

அதனிற்சேர்அடுப்பேற்றிக்கொதிக்கக்காய்ச்சி
அச்சமரவடிக்கட்டிஇறுத்துக்கொண்டு
வதனிற்சேர்நாளேழு கரண்டிகொள்ள
வரிகரப்பான்சொறிகரப்பான்உமிகரப்பான்
கதனிற்சேர்செங்கரப்பன் கருங்கரப்பான்
கதறிட்டுஓடிடும்பார் கண்பாராமல்
மதனிற்சேர்மண்டைப்புண் கரப்பான்கொண்டு
மகாவெட்டைக்கரப்பனுடன் மயங்கிப்போமே.. ௱௩௩

## மேலுக்குத்தயிலம்.

போமென்றமேலுக்குத் தயிலஞ்சொல்வேன்
புகழானகடுகு எருக்கம்வேர்ப்பட்டை
வாமென்றமருக்காரை வேரிணபட்டை
வட்டகிலுப்பைஉத்தா மணியின்வேர்த்தோல்
காமென்றநல்லெண்ணெய் தனிலேயிட்டுக்
காய்ச்சியேதுவாலைபிடகருகிப்போகும்
நாமென்றஇருமூன்றுவேளைபோதும்
நலத்துவாலைத்தயிலம் நல்குவீரே ௱௩௪

பழஞ்சுரம்விடாக்காய்ச்சல் சந்நிக்குஏலாதியுண்டை

நல்குவீர்நல்ஏலக்கிராம்பு ()முத்தம்
நல்()மதுரம்,, இருவேலிவெண்கடுகுசுக்கு
அல்குவீர்நன்னாறி முந்திரிகை,, ரோசினைதான்
ஹராஹராதாளிசமும் நிலப்பனம்வேர்
வல்குவீர்சடாமாஞ்சில் சந்தனத்தூள்
வகையிலுப்பைப்பூவுடனேதேவதாரம்
மல்குவீர்திப்பிலியும் ()ரோகணியும்வகைக்கு
மைந்தனேகால்கழஞ்சு நிறுத்துக்கொள்ளே

()முத்தம்-கோரைக்கிழங்கு
()மதுரம்-அதிமதுரம்.
,, இருவேலைவெட்டிவேர்
,,ரோசினை-கோரோசினை
()ரோகணி-கடுகுரோகணி.

நிறுத்துமேகலவத்தில் போட்டபின்பு
நிலையானசெவ்விளநீர் தண்ணீர்வார்த்து
விறுத்துமேசாமம்ரண்டு விடாதேஆட்டு
விழிமைபோலாகுமிந்த வரிசைபாரு
குறுத்துமே முலைப்பாலால் சாமம்ரண்டு
கூசாமல்அரைத்திட்டு வழித்தெடுத்து
பருத்தகுன்றி அவ்வளவே உண்டைசெய்து
பட்சமொன்றுநிழலுலர்த்தி பதனம்பண்ணே. ௱௩௬

பதனமதாய்முலைப்பாலில்உண்டையிய
பறந்திடுமேபழஞ்சுரமும் விடாதகாய்ச்சல்
விதனமாய்()அம்மையர்க்கூந்தல்கொண்டு
விற்பனமாய்க்கியாழமிட்டதிலேயீய
மதனமந்தபதின்மூன்று சந்திபோகும்
மகத்தானவிஷதோஷமதிகெட்டோடும்
அதனமென்ற()ஆமகணம் ஆமசுரமெல்லாம்
அச்சமுற்றேறெனென்றோடும் ஏலாதியென்றே. ௱௩௭

()அம்மையார்கூந்தல்-முதியார்கூந்தல்
() ஆமகணம் சீதகணம்

கணசுரத்துக்கு-ஏலாதியுண்டை

ஏலாதிமாசிக்காய்திப்பிலியும் ஏலம்
இனியகோரோசினையும் கோஷ்டமாஞ்சில்
ஏலாதிசீரகந்தான் இரண்டக்கருகாரம்
இனத்தோடேகால்பலமாய் நிறுத்துவாங்கி
ஏலாதிகலவத்திட்டு முலைப்பால்வார்த்து
இருசாமந்தானரைத்து உண்டைசெய்து
ஏலாதிகணசுரங்கள் கண்டபேர்க்கு
எடுத்துநீமுலைப்பாலில் ஈந்திடாயே. ௱௩௮

விஷசந்நிசுரங்கள் விக்கல் குளிர்ச்சந்திக்குஉண்டை

ஈந்திடாய்லிலாடியுண்டைவிரும்பிக்கேளு
இனிதானதிரிகடுகு சாதிக்காயும்
ஈந்திடாய்கிராம்பேலம் ரோகணியும்மஞ்சள்
இதன்நபிசரக்குவகை கழஞ்சதாக
ஈந்திடாய்கலவத்தில் பிடியாயிட்டு
இயல்பாகபழச்சாற்றில் சாமம்ரண்டாட்டி
ஈந்திடாய்ப்பயறளவு உண்டைசெய்து
எழில்மாசிப்பத்திரியின் கியாழத்தூட்டே

ஊட்டவேவிஷசந்நி சுரங்கள் விக்கல்
உணர்வானகுளிர்சந்நி உடன்கொட்டோடும்
நீட்டவேயிந்நூலை முந்நூற்றுக்கி
நிகழ்த்தினேன்குழந்தைபிள்ளை யிரக்கத்தாலே

கூட்டவேசிசுநோயைத் தீர்ப்பாராகில்
குருடுமுடம்பிறப்பின்னம் அற்றுப்போச்சு
தாஷ்டிகபாய்இந்நூல்ஆர் கொடுக்கப்போறார்
சண்டாளர்பார்ப்பதற் கெய்தாதென்றே ௱௪௰

## விஷதோஷசந்நிமாந்தம்பித்தசுரம்

## வாந்திக்குகஸ்தூரிமாத்திரை.

எய்தாமல்கஸ்தூரி கழஞ்சு ஒன்று
இனிதானகுங்குமப்பூ கழஞ்சிரண்டு
எய்தாமல்ரோசினியும் கழஞ்சுமூன்று
இவைமூன்றுங்கலவத்தி விட்டுக்கொண்டு
எய்தாமல்அமுர்தமென்னு மூலைப்பால்விட்டு
இனியதொருசாமம்ஒன் றரைத்துக்கொண்டு
எய்தாமல்குன்றிபோல் நிழலுலர்த்தி
எடுத்துநீசெப்புதனில் அடைத்திடாயே ௱௪௧

அடைத்திட்டமாத்திரைதான் ஒன்றெடுத்து
அந்தெடைக்குமூலைப்பால் விட்டிழைத்துக்கொண்டு
விடைத்திட்டமுனைநாவில் தீட்டிட்டாக்கால்
விஷதோஷசந்நிமாந்தம் வீறிட்டோடும்
கடத்தெழுந்தசுரம்வாந்தி தீரும்தீரும்
கடைமருந்தின்போக்கறியார் கமுதைமாண்பர்
குடைத்தெழுந்தகுடாநகில மானேகேளாய்
குருவருளால்கஸ்தூரி குளிகையாமே. ௱௪௨

## கணமாந்தம்கணசுரம் வயிற்றுப்பல்வாந்திக்கு.

## ரசச்செந்தூரம்மாத்திரை.

தாமேரசச்செந்தூரம்° திரிபலாதி
தருகுங்குமப்பூ கஸ்தூரிஏலம்
வாமேதான்° திரிகடுகும்°ரோசினித்தான்
வளமாகப்பலங்காலாய் நிறுத்துக்கொண்டு

° திரிபலாதி கடுக்காய் தான்றிக்காய் நெல்லிக்காய்
° திரிகடுகு-சுக்கு-மிளகு-திப்பிலி
° ரோசினி-கோரோசினி

காமேதான்கிராம்பெடையும் விருகனென்று
கருநொச்சிச்சாறுவிட்டு சாமம்ஆட்டி
நாமேசிறுபயறுபோல் உண்டைசெய்து
நலத்துளசிச்சாற்றிலிட நயந்துக்கேளே ௱௪௩

நயந்துக்கேள்கணமாந்தம் கணசுரங்கள்
நற்பெரியவயிறுப்பல் மாந்தப்போகும்
நயந்துக்கேள்வாந்தி வயிற்றுப்பிசங்கள்
நாடாதுஇவ்வுண்டை நளினமெடுத்த
நயந்துக்கேள்என்குருவின் செயலால்சொன்னேன்
நமசிவயமென்றருளை நாவில்போற்று
நயந்துகேள்ரிஷியென்றும் பேருண்டாகி
நாம்கண்டபலனெல்லாம் நவின்றிட்டோமே ௱௪௪

நாட்பட்டமாந்தசுரம் வாதபித்த சேஷ்மங்கடந்தசுரம்

கனல்சுரத்திற்கும் வில்வாதிமாத்திரை

நவின்றசுரவில்வாதிகுளிகைகேளு
நற்0பச்சைப்பூரங்கால் இலவங்கங்கால்
நவின்றிட்டோம்வால்மிளகு சிறுநாகப்பூ
நன்றான0ரோகணியும் ஏலம்0மாஞ்சில்
நவின்றிட்டோம்சுக்குபேசீரகங்கால்
நளின0செவ்வாலம்பருப்பு0நிகர்க்குஒன்று
நவின்றிட்டோம்0பொற்றலையின் சாற்றாலாட்டி
0 நவநாளுஞ்சென்றபின்பு மிளகுபோலே

0 பச்சைப்பூரம்-பச்சை கர்ப்பூரம்
0 ரோகணி-கடுகுரோணி
0 மாஞ்சில்-சடாமாஞ்சில்
0 செவ்வாலம்பருப்பு-நேர்வாளம்
0 நிகர்கு ஒன்று-சரக்குகட்கொன்று
0 பொற்றலை-பொற்றலைகையாந்தகரை.
0 நவநாள்-ஒன்பதுநாள்

மிளகுபோல்உண்டைசெய்து செப்பில்வைத்து
விளங்குகிறஇஞ்சித்தேன் முலைப்பால்தன்னில்

இளகுபோல்இழைத்துண்ண என்னசொல்வேன்
இனியுநாட்சென்றசுரம் பாந்தப்போகும்
களகுபோல்வாதபித்த சேஷ்மமூன்றுங்
கடந்தசுரங்கனல்சுரமுங் கழன்றுஓடும்
மளகுபோல்இந்த முறை இந்தடோக்கு
மகத்தானநந்தீசர் செயலாங்காணே ௱௪௬

அஷ்டகணத்திற் பாலசஞ்சீவி மாத்திரை.

செயலானகல்நாரு கிராம்புபத்ரி
செவியந்திப்பிலிவிடையங் தான்றியோடு
முயலானகருஞ்சீரகம் அக்ரகாரம்
முருக்கடுகுரோகணியும் சாதிக்காயும்
வயலானபத்திரியும் கடகசிங்கி
வசனித்தகுராசானி கஸ்தூரிபூரம்
மயலாஞ்சீரங்கோரோசினையோடொக்க
மதிட்டக்குங்குமப்பூசமன்தாமே ௱௪௭

சமன்இஞ்சிச்சாற்அரைப்பு சாமம்ஒன்று
கனிகையான்சாறரைப்பு சாமம்ஒன்று
கமன்நாரத்தங்கனிச்சாற் கடிகைமூன்று
கல்லிலரைப்பயறளவாய் நோய்கட்கீய
நமனில்லைஎட்சிநீர்ப்புள் பறைவைதோஷம்
நளிர்சிரமுங்கழிச்சலோடு இருமலீளை
எமனில்லைக் காசமெட்டுக்கணமுமாந்தம்
ஏகுமிதுபாலசஞ்சீவி யென்றெடுத்தவாறே ௱௪௮

எடுத்தவாற்நந்தீசர் மகிமையாலே
இருநூற்றேடொருநூறும் இயம்பினேன்பார்
எடுத்தவாரிந்நூலின் மகிமைகண்டு
எடுத்தாடுஞ்சிசுவின்னோய் தீர்க்கநன்று
எடுத்தாடும்பண்டிதத்தை இயம்பினோம் நாம்
ஏகாந்தம்ஏகாந்தம் அறிவாயுண்ணு
எடுத்தாடும்வல்லமையோர் பார்க்கவேணும்
ஏதேதோமவர்காணப் போறார்பாரே ௱௫௯

காணவேஎன்றார் கொடுக்கப்போறார்
காசினியில்எய்தாது சற்றமிக்கப்பா

தோணவேநாற்கண்டம் எண்ணூறுபாடி
தொகுதிகண்டுநிகண்டாக சோடித்தேன்பார்
பாணவேமார்க்கமுடன் சித்தாந்தங்கள்
பாடினேன்பயனறிய பார்த்தபோர்க்கு
தேனமுர்தஞ்சொரியுமந்த நிகண்டின்பேர்க்கு
தேவரென்னஉனக்கீடோ செப்பக்கேளே ௱௫௰

செப்புதற்குயோகமுடன் ஞானப்போக்கு
செயலறியவாதத்தின் செயலின்மார்க்கம்
ஒப்புதற்குவயித்தியத்தின் புகழோமெத்த
ஒஹோஹோமாந்திரீகம் உருவின்போக்கு
அப்பூவின்பயன்முதலாய் முப்பூமார்க்கம்
ஆதாரமேல்மூலம் கீழாதாரம்
வப்புவென்றவயித்தியத்தின் மூலிமார்க்கம்
வழிகாணுபரிபாஷை வசனித்தோமே ௱௫௧

வசனித்தநிகண்டினுட அதீதந்தன்னை
வாய்ச்சொல்லமுடியாது வரிசைமெத்த
திசனித்தேன் எண்ணூறும்நிகண்டின்மார்க்கம்
திரிசங்கம்விலாடசங்கம் மெய்நீர்கோடி
துசனித்தேன் அஞ்சுகாவியமும்பாடி
துறைகண்டுமேலேறி தொடுத்திட்டோம்பார்
குசனித்தசௌமியத்தை யென்னசொல்வோம்
குவலயத்திலார்க்கெய்துங் கொட்டினேமே ௱௫௨

கொட்டினசொல்லேதென்றால் இன்னஞ்சொல்வோம்
கொடியமாசித்துக்கைவரிசைநேர்மை
யொட்டினசொல்யோகத்தின் பரீட்சைநேமம்
ஒடுங்கினின்றயோகத்தின் பரீட்சைநேமம்
மட்டினசொல்லார்காணப் போறுரையா
மகத்தானசிபதங்கள் மகிமையின்கூற்
திட்டநெறிபறிபாஷை விளக்கமாக்கித்
திறந்திட்டேன்சௌமிய சாகரநூல்பாரே ௱௫௩

நூல்பார்த்தால் பழுதில்லைக்கிடைக்குமுத்தி
[illegible]பார்பார்த்தவர்க்கு எய்துமோட்சம்

கால்பார்த்துநடப்பவர்க்குக் கருத்தான்வேணும்
　கலையேறிமதிவிளக்கி அறிவில்நில்லு
கோல்பார்த்துநடப்பவர்கள் குருட்டுமான்பர்
　கொடியதீவினையாளி பாவகற்மி
நாள்பார்த்துநடப்பதற்கு வயதோஇல்லை
　நமனுக்குஆளாவாய் தீவிரமாய்பாரே. (கருச)

தீவிரமாய்ப்பார்ப்பதற்கு நூலைத்தேட
　தெண்டனிட்டுநூல்கொடுக்கும் புண்ணியோனை
நோவாமல்மனங்களியப் பணிந்துவாங்கி
　நூறுதெண்டனிட்டு அவரிடத்திலேகி
காவனமாய்பிழைப்புஇனி அய்யாவென்று
　கைகட்டிஉபகாரமாகவாங்கு
கோவமதாய்மொழிகூறி வாங்கவேண்டாம்
　கொடியதீவினைசெய்துங் குருவினாலே. (கருரு)

குருவறியசொன்னமொழி யறிவாற்கண்டு
　கோரமதைவையாதே குருவைப்பூசி
திருவறிசநாம்சொன்ன தொருமொழிக்கு
　திங்கள்கருவுதித்தவருள் மாய்கைதன்னை
ஒருவகையாய்அறுத்துமே வெறுத்துத்தள்ளி
　ஓங்காரபதியறிந்து உருவைநாட்டி
அறிவறியகலைசொன்னேன் அத்தாள்பாதம்
　அநுக்கிரகமவளுடைய அதீதங்காணே. (கருசு)

அதீதந்தான்சொல்லக்கேள் ஆதிமூப்பூ
　அஞ்செழுத்தைவழலைதனை முடித்தால்முத்தி
வதீதந்தான் சரவேகம்ஒளியிற்கூடின்
　வந்தவிதிபோனவிதி வழக்கந்தோன்றும்
பதீதந்தான்பதியாசம் பதியைக்காணில்
　பஞ்சரத்தினம்ஒளிநேர்மை பணிந்தால்முத்தி
ததியறிந்துநூல்பார்த்தால் எல்லாஞ்சித்தி
　சாரணையன்விரிவறிந்து கைலைமேவே. (கருஎ)

---

* சரவேகம் இடகலையை பிங்கலையோடுறவாக்கி சுழினைமேவி பூரகம்-நஉ-கும்பகம்-சுச-ஆக்கல்.

கைலையுடன்வரிவறிந்துக் கனலைப்போக்கி
  * கஞ்சனுடபாதத்தால் முக்திராதன்பெற்று
மயிலைவெளியிருளகற்றி மனோகரத்தை
  மனதறிவால்ஒளியேற்றி மனதில்கூர்ந்து
தயிலைமுடிபீடத்தைத் தாண்டியேறி
  சச்சிதாநந்தமென்ற சார்பிற்கூடி
பயனறியபரிபாஷை துலக்கங்கண்டு
  பாதத்துள் தாமரையைப் பணிந்திட்டேனே. (கருஅ)

* கஞ்சன்-பிரமன்.

பணிந்திடபாதத்து ளடிபணிந்து
  பஞ்சபல்பொறிசூட்டிப் பதியைநோக்கி
துணிந்தாசைநாணமதை விட்டுமாறி
  துலக்கமாய்படிகம்போல் துவக்கமாகி
அணிந்தபஞ்சபுஷ்பத்தால் அர்ச்சித்தேதான்
  ஐயாறுதலந்தாண்டி அநாதிகண்டு
கனிந்துகருமனோகரத்தைக் கண்டித்தேதான்
  கைலைபுரயேவுகின்ற கருத்தைபாரே. (கருகூ)

கைலையின்கூற்வெளியொளியாங் கண்டசூக்ஷம்
  கம்பைந்திதும்பைமலர்க் கனிந்தசூக்ஷம்
கைலையின்கூற்இருளகற்றி ஒளிசத்தத்தின்
  கனகசபைநடனஒலி கைலைதீபம்
கைலையின்கூற்பதினெண் வாத்தியத்தினோசைக்
  கைலாசமுருவேறக் கனிந்துபார்க்கில்
கைலையின்கூற்சித்தோடே யதந்தமார்க்கம்
  கண்டிலார்உருவறியார் உருவின்மட்டி. (கசுo)

உருவறியமனோகரத்தை நோக்குநோக்கு
  உற்றவிடம்உருவறிய உருவிப்பாய்ந்து
திருவறியஅச்சுடரில் ஏறிப்பார்க்கில்
  தீபஒளிநடன கீதங்கள்தோற்றும்
கருவறியகைலாச மேருமார்க்கம்
  காண்கிறதும்அரிதுமெத்த கசட்டுமான்பர்
ஒருவழியாய்வீண்பழிகள் சோக்காகின்று
  உய்த்துய்த்து அந்திடத்தில் உறுதியூணே. (கசுக)

கலியாணிலேகியம்.

உண்ணுதற்குக்கலியாணி லேகியங்கேள்
உறவானகருப்பஞ்சாற் நெல்லிக்காய்ச்சாற்
தண்ணுதற்குகலியாணி பூசனிக்காய்ச்சாற்
தண்ணிமிட்டான்கிழங்குச்சாற் நிலப்பனஞ்சாற்
ஒண்ணுதற்குநெய்தல்கொட்டி அல்லிச்சாற்தான்
ஒரிதழ்த்தாமரைச்சாற் நெய்ச்சிட்டிச்சாற்
பண்ணுதற்குதாமரையின் கிழங்குச்சாறு
* பசுந்தோன்றிச்சாறுடனே முசுமுசுக்கை. (கசுஉ)

* பசுந்தோன்றி-செங்காந்தள்.

பசுவானகுருவிச்சி * வச்சிரவல்லி
பைம்புளியாரைவல்லாரை கீழ்வாநெல்லி
திசுவான () திரிசூலி ,, சுவர்ப்பிடித்தான்
சிறுகீரை ;; அத்திக்கண்ணி ஆடாதோடை
விசுவானவெள்ளரிக்காய் பசளை * காணி
விரி—யானைவணங்கிச் செவ்விளநீர்த்தண்ணீர்
உசுவானநெருஞ்சில்செப்பு நெருஞ்சில்சாற்தான்
உத்தமனேவகைவகைக்குப் படிகால்தாக்கே. (கசுரு)

* வச்சிரவல்லி-பிரண்டை
() திரிசூலி-சதுரக்கள்ளி
,, சுவர்ப்பிடித்தான்-சுவரொட்டி
;; அத்திக்கண்ணி-கரிசாலை
,, காணி-பொன்னாங்காணி
— யானைவணங்கி-ஆனைநெருஞ்சில்

தாக்கியதோர்புளிப்பிட்ட மாதளஞ்சாற்
தான் * நிம்பச்சாற்கொடிமாதளையின்சாறு
வாக்காகஇவைபடிகால் அளந்துசேர்த்து
வசனித்தசீனியொன்று ஆவின்நெய்தான்

*நிம்பச்சாறு-எலுமிச்சம்பழச்சாறு.

பாக்கியமாய்அரைவீசைப் பாகுசேரு
படிப்பவர்க்குக்கடைமருந்தின் பான்மைகேளு
ஆக்கியதோர்சோம்பு நற்சீரகந்தான்
அதிமதுரந்தக்கோலங் கொத்துமல்லி. (கசுச)

மல்லியென்றஇடுபிடலும் பேரரத்தை
மஹாதிரிசாதமுடன்*அங்கோலந்தான்
வில்லியென்றசடாமாஞ்சில் நன்னாறிதன்வேர்
வெட்டிவேர்கூகைநீறு () குறுவேர்த்தோலும்
முல்லையென்றபேரீந்து தீவதிராக்ஷம்
முக்கியமுடன்நெற்பொரியும் சந்தனத்தூள்
தல்லையென்றபரித்தி ,, முத்தம்—சீந்தில்சத்து
தாளிசமும்கல்நார்கல் மதமுஞ்சேரே. (கருசு)

* அங்கோலம்-அழிஞ்சில்
() குருவேர்-சாயவேர்
,, முத்தம்-கோரைக்கிழங்கு
— சீந்தில்-சீந்திசர்க்கரை.

சேர்க்கவே ¦ கர்ப்பூரம் () சத்துப் ,, பூரம்
செண்பகப்பூசெங்கீரை—வச்சிரவல்லி
தார்க்கவேசங்குபற்பம் பவளஞ்சேரு
தான்வகைக்குப்பலம்அரைதான் தூளதாக்கி
ஊர்க்கமுடன்சாற்நெய்யும் ஒன்றாய்ச்சேர்த்து
உத்தமனேநீர்வற்றக காய்ச்சும்போது
ஏர்க்கவேசூரணத்தை எடுத்துக்கொட்டி
ஏகமாய்க்கிளரியிட்டு இறக்கிடாயே. (கசுசு)

¦ கர்ப்பூரம்-பச்சைக்கர்ப்பூரம்
() சத்து-சிலாசத்து
,, பூரம்-ரசகர்ப்பூரம்
— வச்சிரவல்லி-பிரண்டை.

இறக்கியேகணேசன்முதல் வயிரவர்க்கும்
ஏகாந்தவாலைபஞ்சை பணிதாயார்க்கும்

துறக்கியேபூசித்து தியானஞ்செய்து
தொழுதுஇருகரங்கூப்பி யடிபணிந்து
தறக்கியமாய்தீரும்நோய் விரும்பிக்கேளு
தாபசுரம்மாறல்சு ம் சந்நிவாதம்
வெறக்கிப்போம்பித்தசுரம் வயிற்றெரிச்சல்
வெண்பாண்டுவிழிகாசம் க்ஷயங்கள்போமே. (கசுஎ)

சயங்கள்போம்காமாலை நீரிழிவுமேகம்
சயனத்தில்புண்புரைகள் நயனசாசம்
சயங்கள்போம்அதிசாரம் சோகைலாண்டு
தாப்சுரம்அதிகசுரம் அதிகவாந்தி
சயங்கள்போம்மண்டையிடி அண்டகாசம்
சண்டாளபீநசமும் சாந்தமாகும்
சயங்கள்போம்சடத்திலுள்ள நோய்கள்தீரும்
தண்மையுள்ளலேகியத்தின் சார்பிதாமே. (கசுஅ)

குஷ்டம்எலும்புருக்கிபாண்டுமேகம்-உ.மிக-க்கும்

குங்குமப்பூலேகியம்.

சார்வானகுங்குமப்பூ வெள்ளரிக்காய்வித்து
சாதிக்காய்லவங்கப்பூ லவங்கப்பட்டை
ஏர்வானஏலமுடன் லவங்கபத்திரி
இயலானநீர்முள்ளி நிலப்பனம்வேர்
கோர்வான =குமரிவேர் நெருஞ்சில்()செப்பு
கொடிமாதளம்வித்து,, வணங்கிபானை
தீர்வானதிருத்-துழாய் நெல்லிமுள்ளி
திப்பிலியும்அதிவிடையம் கடுக்காய்சுக்கே,. (கசுகூ)

---

= குமரி-சோற்றுக்கற்றாழை.

()செப்பு-செப்புநெருஞ்சில்,

,, வணங்கியானை இது தமிழ்மொழி மாறுதன் மொழி.

,, ஆனைவணங்கி ஆனைநெருஞ்சில்.

* துழாய்-துளசி.

சுக்கானநறுவிலியின் பழமுந்தான்றி
சுய = கூகை மிளகு () கோதும்பைச்சத்து
சுக்கானவாதுமைப் பருப்புபோலே
கஞ்சாவித்ததிமதுரம் ,, உழுந்துசத்து
சுக்கானதேறறு ரோகணியு*மாஞ்சில்
சுகமாகவகைக்குஒரு பலமேவாங்கி
சுக்கான ;; பன்னீர்பூபலம் அஞ்சாகும்
சுக்குவற்றலாயுலர்த்தி சூரணித்தே. (களஎ)

= கூகை-கூகைநீறு.

()கோதும்பைச்சத்து-கோதும்பைமா அன்றியும் கோதும்பைநொய்ப்பாலுஞ்சேர்க்கலாம்.

,,உழுந்துசத்து-உழுந்துமா.
*மாஞ்சில்-சடாமாஞ்சில்.
;;பன்னீர்ப்பூ-ரோசாப்பு.

சூரணத்தில் = அப்பிரேகசெந்தூரந்தான்
சுத்தமாமதுவுங்கால் பலமேயிட்டு
வாரணத்தின் () கோவின்நெய்ப் படிகாலாக
வசனித்தகற்கண்டுப் பலம்அஞ்சிட்டு
காரணத்தின்கற்கண்டும் நெய்யுங்கூட்டி
காய்ச்சியிலேபாகுவரில் சரத்தைக்கொட்டு
ஏரணத்தில்கிண்டிமெழு காகும்போது
என்னசொல்வேன் லேகியத்தைஇறக்கிடாயே.

= அப்பிரகசிந்தூரம்-கிருஷ்ணவண்ணஅப்பிரேகம் கஉ0-புடந்தீர்ந்துசத்தில்லாதிருக்கவேண்டும்.
()கோவின்நெய்-பசுவின்நெய்.

இலக்கியேகுப்பிக்குள் பதனம்பண்ணி
என்மகனேதேவிக்கும் வயிரவர்க்கும்
இறக்கியேசண்முகற்கும் பூசைப்பண்ணி
ஏகாந்தசேர்வையதாய் பணிந்துபோற்று

இறக்கியேஇருவேளை அந்திசந்தி
எடுத்துநீசுண்டக்கா யளவுகொள்ளு
இறக்கியேபுளிபுகையும் பெண்ணுந்தள்ளு
இச்சாபத்தியமாக எடுத்துஉண்ணே. (கஎஉ)

உண்ணபின்புதீரும்நோய் உரைக்கக்கேளு
உத்தமனேமேகநீர் வெட்டைப்பாய்ச்சல்
திண்ணபின்புநீரடைப்பு நீர்ச்சுருக்கு
திரிதோஷம்கல்லடைப்பு*கிருமிபாய்ச்சல்
அண்ணபின்புசதையடைப்பு நீர்க்கிரிச்சி
அமுர்தமெனுமதுமேகம் மூத்திரபாளை
வண்ணாரத்தப்பிரமியமும்()பெருத்தமாடு
வாதகுஷ்டபித்தகுஷ்டம் கிரந்திபோமே (கஎங)

*கிருமி-புழு.
()பெருத்தபாடு-பெரும்பாடு

கிரந்தியுடன்சூலைபதி னெட்டுந்தீரு
கிறுகிறுப்புதலைசுழற்றல் வாய்நீரூறல்
கரந்திபோர்காலெரிவு கையெரிவுமந்தம்
கண்ணெரிச்சல்பித்தவெட்டை அரோசங்கள்
கிரந்தியுடன்அஸ்திசுரம் எனும்புருக்கி
கேள்தொத்துமேகமுடன் ஆனைப்புண்கள்
கிரந்தியுடன்அரையாப்பு கொருக்குமேகம்
கேடுகெட்டநேசயான தாதுநஷ்டம் (கஎச)

நஷ்டமாம்ஆண்பெண்கள் மலட்டுநோய்கள்
நாடாதுநாடாது வியாதியெல்லாம்
நஷ்டமில்லைஅழகுண்டாம் தேகம்பொன்னும்
நலமாகும்பத்தியந் தான்ஆவின்நெய்பால்
நஷ்டமில்லைசிறுகீரை பொன்னாங்காணி
நல்லவெள்ளாட்டிறைச்சி பனிப்பயறுதானும்
நஷ்டமில்லை=கதலிகனி தீவதிராக்ஷம்
நலமானசப்புநாவல்மாதளங்காயாமே. (சஎரு)

---

=கதலிகனி-வாழைப்பழம்.

மேகநாதிஎண்ணெய்.

ஆமேதான்மேகநாதம் எலிச்செவிக் =குரும்பைக்காண்
அவுரியும்வல்லாரை () மேனிச்சாறும்
தாமேதான்பொடுதலையும் ஆடாதோடை
தழைதுளசிகுட்டிவிளா தூதளஞ்சாற்
கோமேதான்கோழியவரை சரக்கொன்றைச்சாற்
கொடிதானதகரையான் முருங்கைப்பட்டை
வாமைதான்ஒரிதழ்த் தாமரைபற்படகம்
வகையானவிஷ்ணுகாந்தி நெருஞ்சே. (கஎசு)

=குரும்பை தென்னங்குரும்பை
() மேனிச்சாறு-குப்பைமேனிச்சாறு

நெருஞ்சானதிருகுகள்ளிச் சாற்வகைக்கு
நெஞ்சமேபடிகாலாய் அளந்துக்கொண்டு
நெருஞ்சானஏரண்ட எண்ணெய்படிரண்டு
நேசமுடன்கலக்கியொன்றாய்க் கலந்துக்கொண்டு
நெருஞ்சானசாதிக்காய் சாதிப்பத்திரி
நிகழ்ந்த=இருகிரகமும்()கரியுப்போடு
நெருஞ்சானதுத்தமொடு துருகிகாயம்
நேரானசருள்ளிக் கோரோசினையாமென்றே. (கஎஎ)

=இருசீரகம்-கருஞ்சீரகம்-நற்சீரகம்.

()சரியுப்பு-கறுப்பாயிருக்கிறவுப்பு.

ரோசினையாய்வகைவகைக்குக் கழஞ்சதாக
நுணுக்கமாய்மருந்தெல்லாங் கல்வத்திட்டு
ரோசினமாமணித்தக்காணிச் சாற்றாலாட்டி
நுட்பமாய்எண்ணெய்கற்கம் ஒன்றாய்ச்சேர்த்து
ரோசினமாம்அடுபேற்றிக் கடுகைக்கண்டு
ஒருசாமத்துட்படவே யிறக்கிடாய்நீ
ரோசினமாம்வடுகனுக்கும் ஆத்தாளுக்கும்
ஒருமனதாய்பூசித்துப் மனுக்கிடாயே. (கஎஅ)

பணித்திடவேசுரம்போகும் காய்ச்சல்போகும்
வழியில்லைக்கணம்பதி னெட்டுந்தீரும்

பணிந்திடவேநீர்க்கோவை நீர்க்காமாலை
பஞ்சரணம்அஸ்தி வெட்டையஸ்திச்சுர
பணிந்திடவேகபமீளை சுவாசமெல்லாம்
பதினெட்டிலுள்ளவினை பறந்தேபோகும்
பணிந்திடவேபிருள்ள முருங்கைக்கீரை
பத்தியதானிதுகண்டு பார்த்திடாயே. (கஎ௯)

பதினெட்டுக்கரப்பானுக்கு-எண்ணெய்.

பார்த்திடாய்*இருவேளை செம்பரித்தி
பரியமணித்தக்காளிபொன்னாங்காணி
பார்த்திடாய்ச்சூரியந்த நத்தைச்சூரி
பகர்அம்மன்பச்சரி தகரைப்*பாசி
வார்த்திடாய்க்குட்டிவிளாம் பட்டைப்பாகல்
வண்மைகருத்துளசிச்செம் முள்ளியுண்டு
காத்திடாய்பாவட்டைப் பொடுதலைத்தான்
கருங்காலிக்()கழலிலை,,புள்ளடியதாமே. (கஅ0)

*இருவேளை-தைவேளை-நல்வேளை

*பாசி-பழம்பாசு

()கழலிலை கழற்சியிலை

,,புள்ளடி-சிறுபுள்ளடி.

ஆமேதான்சுரைதுவரை கொன்றப்பட்டை
அழகானதவமுருங்கை*சாலை மேலும்
வாமேதான்அகத்திக்கற் றாழஞ்சோறும்
வகையானசின்னியி ருள்ளிப்பூண்டு
காமேதான்இவ்வகைக்கு தனிச்சாற்வாங்கி
கடும்பாண்டம்அதனிற்கால் படிதான்ஊற்று
தாமேதான்ரவியியுவைத்துக் கடைமருநது
தாரணியில்நல்ஓமம் சாதிக்காயே, (கஅக)

()சாலைகோடகசாலை

காயோடுபத்திரியும் வசம்புகோஷ்டம்
கண்மணியேகொத்தமல்லிக் காட்டுச்சீரம்

வாயோடுதிப்பிலியு இஞ்சிக்கூட்ட
வகைவகைக்குவிருகனெடை அஞ்சதாக
தாயோடுஆமணக்கின் எண்ணெய்தானும்
தப்பாமல்குறிணியதாய் அளந்துஊற்றி
மாயோடுசாக்கையெல்லாம் மெழுகாய்ஆட்டி
வண்மையாய்கலக்கிட்டு மகிமைபாரே. (௧௮௨)

மகிமையாய்எரிந்திட்டு எண்ணெயாக்கி
வளமாகசிறுகுழந்தை ()ஆண்டீரெட்டு
மகிமைபாரிதுவயதில் கரப்பான்கண்டால்
வகையுடனேபதினெட்டுக் காப்பானும்போம்
செகமகிழும்இந்தஎண்ணெய் செப்பக்கூடா
தேயத்தில்உண்மையென்ற பண்டிதர்க்கு
அகமகிழும் நூலிந்த தர்மத்தோரை
அங்கரத்தால்அவர்பதத்தைதெண்டன்செய்யே (௧௮௩)

()ஆண்டீரெட்டு-௰௬-வருஷம்

தெண்டனிட்டுக்கடினமதாய் வாங்கவேண்டாம்
திருடருக்குஈயார்க தினமும்போற்று
கண்டபடிமனஞ்சலிக்க ஏசலாசா
கடுங்கோபமாயவரை மொழிகூறுதே
பண்டுளபமாலையணி அமைப்பினோர்க்கு
பரிதிமதிவடமொழியும் அவர்க்கெய்தும்பார்
தொண்டுளபமாலையணி மனோமணித்தாய்
துறைகாணவழிசொல்வாள்தொண்டுபண்ணே (௧௮௪)

தொண்டுபண்ணிதேறுமோர் லக்ஷத்திலொருவர்
தொகைநிலையும்ஆதியந்த வரையுங்காண்பார்
கண்டுகண்டுகருவறிந்துங் கசடாய்ப்போவார்
கருதறியாமூடமதால் கலங்குவார்பார்
அண்டுமட்டும்பிறப்பிறப்பா லாவதென்ன
அசட்டுநிலையுள்ளவர்க்கு அரன்வாக்கில்லை
வண்டுளபமாணிக்க ஸொரூபமான
வாசிதனைதொழுதோர்க்கு வாய்க்குமென்றே (௧௮௫)

மாந்தகிராணி மாந்தஇசிவுசோகை காமாலைசுரக்கட்டி விஷதோஷம்
சுரங்கோழைக்கட்டு கோட்டாவி விம்மல்-தும்
மல்-பித்தகுண் பாண்டுக்குகியாழம்.

வாய்க்கவேசிறுதேக்கு வாய்விளங்கம்
வால்மிளகுரோகணியும் சுக்கோடேவம்
சாய்க்கவேதிப்பிலி இலவங்கந்தான்றி
தக்கோலம்*மொஸ்தகப்பால் வகைவகைக்கு
மாய்க்கவேகால்பலமாய் நிறுத்துக்கொண்டு
வண்மையாய்தூளிடித்து பாண்டத்திட்டு
காய்க்கவேஇருநாழி சலமும்விட்டுக்
கடுகவேஎட்டொன்றால் காய்ச்சிறக்கே. (கஅசு)

*போஸ்தகக்காய்-கசகசாவின்ஓடு.

இறக்கியேகொடுத்திடவே கிராணிமாந்தம்
இயல்பானசுரக்கட்டி விஷதோஷங்கள்
உறக்கியேஇசிவுகண்ட மாந்தத்தோடு
உற்றதொருகிராணி சோகைக்காமாலை
நொறுக்கியேகொண்டசுரம் கோழைக்கட்டு
நொடிக்கின்றகோட்டாவி விம்மல்தும்பல
நறுக்கிவிடும்பித்தகண பாண்டுஎல்லாம்
நமன்ஓடிப்போவான்பார் கியாழத்தாலே. (கஅஎ)

மாந்தம்-சுழிமாந்தம்-கழிச்சல்மாந்தத்துக்கும்கியாழம்

கியாழத்தால்மாந்தங்கள் போகக்கேளு
கெடியானமாசிபத்ரி பற்பாடந்தான்
காழாத்தால்நாயுழிவி முட்காவேளை
கருஞ்சீரகத்துடனே கோழியெச்சம்
இயாழத்தால்பற்பமாய்ச் செய்துக்கொண்டு
* இருவேலிசங்குசுக் கோடேஏலம்
கியாழத்தால்ரோகணியும் பறங்கிச்சக்கை
* சீக்கணும்பட்டைக் காவட்டம்புல்லே. (கஅஅ)

* இருவேலி-வெட்டிவேர்

* சீக்கணும்பட்டை-சீக்கிரிமரப்பட்டை.

புல்லானகடுக்காயும் மாசிக்காயும்
புகழானவசம்போடு தான்றிமூத்தப்

வில்லானநீர்ப்படி யிரண்டதாகும்
விதமாகஎட்டொன்ருய்க் காய்ச்சியேதான்
கல்லாமாந்தமொடு கழிமாந்தங்கள்
* கைப்*பினிப்பால்வந்ததொரி கழிச்சல்பாந்தம்
மல்லானமாதாவாய்ச் சிறுபண்டத்தால்
மருவிவந்தமாந்தமெல்லாம் மயங்கிப்போமே. (கஅசு)

* கைப்பு-கசப்பு.

* இனிப்பு-தித்திப்பு

மாந்தத்துக்குவிழுங்குமாத்திரை.

மயங்கிப்போம்விழுங்குமாத் திரைதான்சொல்வேன்
மாதரசேசாதிலிங்கம் பூரம்ஏலம்
மயங்கிப்போம்பூங்காவி வகைக்குக்காலாய்
வண்மையாட்கல்வத்தில் போட்டுக்கொண்டு
மயங்கிப்போய்கோதும்மைக் கஞ்சிவார்த்து
மைபோலேசாமம்ரண் டோயாதாட்டி
மயங்கிப்போம்பயறுபோல் உண்டைசெய்து
மரச்செப்பில்வைத்தடைத்து மகத்துவங்கேளே. (கசுய)

மகத்துவங்கேள்ஓராண்டி பிள்ளைக்கெல்லாம்
0 வல்சிதனில்பிடித்துண்ட மாந்தமேது
மகத்துவங்கேள்சிறுகுழந்தை யானதற்கு
மாசிபத்ரித்கியாழத்தில் உரைத்திடாய்நீ
மகத்துவங்கேள்செவ்வாப்புக் காப்பான்போகும்
வரிசையாய்மாத்திரையின் மகத்துவம்பார்
மகத்துவந்தான்என்னசொல்வேன் இந்நூல்போக்கு
மஹாரத்தினச்சுருக்கமென் மருவிப்பூணே. (கசுக)

0 வல்சி-சோறு.

இந்தமாத்திரையை சொற்றுட்பொதிந்திரவில்விழுங்கச்செய்க.

ஒருவருஷத்திற்குகுறைந்தவயது குழந்தைகட்கு

மாசிபத்திரிகியாழத்திலிழைத்திடுக.

பூணுவதுஏதென்றால் இன்னஞ்சொல்வோம்
புனிதமுள்ளேரறியவேண்டி புகலுவோங்கேள்

பூணுவதூசனுட மகிமையாலே
புகலுகிறேன்பக்ஷியென்றே கிரகக்கூறை
பூணுவதுபறவைகுண மறியவேண்டி
புகழானபோஷத்தின் பலனைக்காண்கில்
பூணுவதுமந்தாதி கிருபையெய்தும்
பொல்லாதார்தங்களுக்கு எய்தாதென்றே (௧௬௨)

நீலிப்பக்ஷியின் தோஷகுணம்.

எய்தாமலவர்பிறந்த நாழிதன்னில்
என்றநீலிபெண்பக்ஷி விழிக்குமாகில்
எய்தாமல்சீறியழுங் கண்ணோக்காடு
இசறியரும்விக்கலுடன் வாய்நீருறல்
எய்தாமல்இக்குணங்கள் தீர்க்கவேண்டின்
இயம்புகிறேன்கழிப்புதனை யியல்பாமைந்தா
எய்தாமல்எண்ணெய்சட்டி யொன்றெடுத்து
என்மகனேமூன்றுவர்னப்புள்ளிக்குத்தே (௧௬௩)

மூன்றுவர்னப்புள்ளியிட்டு புட்பஞ்சாத்தி
முக்கியமாய்தாம்பூலங் குங்குமத்தாள்
அன்றுமுதல்பேயினுட நாமஞ்சொல்லி
ய-ந-ம-சிவ-நூற்றெட்டு அருவையோதி
வான்றுஇந்தசாந்திசெய்து காலசந்தி
வடதிசையில்கொண்டுவைக்க சாந்தியாச்சு
மான்றுபனையோலையிலே ரீங்காரமிட்டு
மடித்தந்தகுளிசமதைக் கழுத்தில்கட்டே (௧௬௪)

பாலுண்ணுபிள்ளைகட்கு-சாந்தி,

கருத்தறிமுலையுண்ணு பிள்ளைகட்கு
கருக்கோலைதனிலாறு கோணமிட்டு
உருத்தெரியசூலமிட்டு நடுவில்மைந்தா
உவ்வொன்றுரீங்காரம் நாலாகும்
மருத்தெகியமஞ்சளிட்டுக் குளிசமாடி
*மதுவுடனேஉழிந்தடையுஞ்சந்தனம்பூ
வரித்தெரியதாம்பூலந் தூபங்காட்டி
வசனித்தகுளிசமதை கட்டிடாயே (௧௬௫)

*மது-கள்.

வேறு.

கட்டவேயின்னங்கேளு கருதுவோர்முனிவோர்நாமும்
வெட்டவேவியாதியெல்லாம் வீறிட்டுபந்தோட
தொட்டிடமூலஞ்சொல்வோம் தோஷத்தின்நிவர்த்திக்கேளாய்
மட்டிடுமான்பருக்கு மங்கையர்மாய்கைதள்ளே (௧௬௬)

தள்ளியேபார்ப்போர்கேளீர் தவனிநல்ஹறியும்ஸ்ரீயும்
வெள்ளியஹறியும்ஸ்ரீயும் மிகமிக்கக்கிலியும்ஐயும்
சள்ளியைநினைப்பதன்று கருதிநூருபிரந்தான்
தெள்ளியவசியமாகும் சீர்பெறத்தோஷம்போமே (௧௬௭)

௧அ-தோஷநிவர்த்தி.

போமெனநோய்வகைக்கு புகழிரண்டொன்பான்தோஷம்
நாமெனதோஷ்மெல்லாம் நடுங்கிடுமூலத்தாலே
காமெனகழிப்புமந்த சதிர்முகன்சலத்திலோத
வாமெனசிசுவின்கிடு வல்வினைதீருமென்றெ (௧௬அ)

வல்வினைநோய்மருந்தும் வகைவகையுரைத்தோம்நாமும்
தொல்வினைதீரஇன்னும் தோஷத்தின்மூலத்தாலே
கல்வினைஅறுகாலோத கழிச்சல்கள்பறவைக்கூற்கள்
வில்வினையானமூல விர்த்தாந்தமின்னங்கேளே (௧௬௯)

கேளென்பஞ்சவற்ன கிளிமுகபுட்பத்தாலே
தோளெனதொண்ணூற்றுற்றஞ்ஈ தோத்திரவர்ச்சணைகட்செய்து
மாளெனபஞ்சாட்சரங்கள் மைந்தனேபூசிப்பின்பாய்
கோளெனதோஷப்பட்சிக் குலவுநிர்மூடப்போமே (௨௱)

குலவுமாம்விளங்குவில்லு கூரம்பூமரம்பூடுக்கள்
நிலவுமாமணிவர்க்கத்தார் நீள்சினத்தோர்கட்கெல்லாம்
அலவுமாம்கேதுராகுஅமிசத்தில் புதன்சுக்கிரன்தான்
பிலமானபார்வையாகில் பிலத்திடுந்தொஷந்தானே (௨௱௧)

தோஷத்தின்வகையைநன்றாய் தொகுதிகண்டுரைபோமின்னம்
வாசமாம்விதியால்வந்த வில்வினைவருகும்வாறும்
தேகத்தின்வகையைக்கண்டு தெளிந்திடஉரைப்போமையா
மாசத்தின்பிலனுநல்ல மறைமறவிளம்பனுற்றும் (௨௱௨)

விளம்பிடகாலன்பஷி எமன்எமதூதன்மூன்றும்
குளம்பிடகாலன்விச்சூர் கூறுமூத்ததூதான்ஏமன்
தளம்பிடவல்லூற்தூதன் தானிவைவிழிக்குமாகில்
வளமாரணபஷியென்று மாமுனியுரைக்கலுற்றார் (உளங)

உத்தானதனக்கு ஒருமந்திரமெதிருமில்லை
வித்துற்றவிச்சூர்நன்று விளம்பிடபேதமில்லை
பத்துற்றவல்லூற்பாவ பக்ஷியும்பிலத்தபக்ஷி
முத்துற்றமூன்றுபக்ஷி மும்மூர்த்திக்கீடதாமே (உளச)

வேறு.

இட்டுநாள்முதல்திங்கள் ஓராண்டுக்குள்
என்றகூளிபக்ஷியது கோபிக்கும்பார்
நட்டுமுடிவயிறுபோம் வாந்தியாகும்
நல்லகளைசூழ்ந்திருக்கும் கண்முழிக்கும்
பட்டுபனிதிரேகங்கால் குளிர்ந்திருக்கும்
பக்ஷியுடபிலத்திலே வருகுங்கூர்தான்
அட்டதனைசோறுடனே பொரியும்அன்னம்
அடையிரண்டுபிண்ணுக்கு உலர்ந்தமற்சம் (உளரு)

மற்சமன்றிலேக்கறியும் மதுவும்வைத்து
மாஇலையில்படைத்துவைநீ பிணிகளெல்லாம்
குச்சமன்றி*மேதியுடகொம்புசீவி
குஞ்சரமேசந்தத்து மிரண்டுஞ்சேர்த்து
வச்சமன்றிதூபமிட்டுத் தாய்ப்பிள்ளைக்கும்
வசனித்தேன்சாந்திசெய் வடக்கில்வைநீ
மச்சமென்றபக்ஷியின்கூற் தோஷமெல்லாம்
மதிகெட்டேயோடிவிடு மருவிச்செய்யே (உளஎ)

*மேதி-எருமை.

மாந்தஎண்ணெய்-வேறு.

செய்திடமாந்த எண்ணெயைச்சொல்வேன்
வைதிடஇஞ்சி சங்குடன்சின்னி
கைதிடகாணி கரந்தையும்வன்னி
நெய்திடஎல்லாம் நேராய்ப்பிழிந்திடே (உளஅ)

பிழிந்துசிற்றே ரண்டத்தின்எண்ணெய்
கலந்திட்டேயொரு கட்டையால்தீயிடு
செலந்திகள்காச்சி சிறுகஇறக்கிடு
மெலிந்தநோய்தீர விளம்புவேன்கேளே (உ௱அ)

கேளிடுமாந்தம் மலபந்தமர்ந்தம்
சேலிடுசலத்திற் செனி()சிரமாந்தம்
பாலகர்உண்ணப் பறந்திடும்பாரு
சீலக்கொடிய சீதளம்போகுமே (உ௱கூ)

கண்த்தெண்ணெய்.

போகவேயின்னம் புகலுவோங்கேளு
ஆகமருள்கிழங்குடனே உள்ளிதான்
தேகவேகிம்ப திமிச்சாற்வாங்கிவிடு
ஏகமாயெண்ணெய் எரித்துநீயுண்ணிடே (உ௱௰)

உண்ணகணங்க ளோடிடுமையா
மன்னுமேமாந்த மரணநோய்தீரும்
கண்ணுமேகாணு கதறிடும்பாருநீ
எண்ணுமேயிந்தஎண்ணெயைச்செய்திடே (உ௱௰௧)

ரணத்துக்குசூரியபுடஎண்ணெய்,

செய்திடஇன்னஞ் செப்புவோங்கேளு
மைதிடாமாஞ்சில பணமுத்தம்சீந்தில்தான்
கைதிடக்காஞ்சொறி கடிந்துஇடித்து
சைதிடஎண்ணெயில் சரியாம்கலக்கிடே (உ௱௰௨)

கலக்கிடுகானல் காட்டிடுமூன்றுநாள்
அலக்கிடுஎண்ணெய் அஞ்சுநாட்கொண்டிடு
தொலைத்திடும்நோயை தோன்றுதுபாருநீ
மலக்கிடஇந்த மகிமையைக்கண்டிடே (உ௱௰௫)

கண்டிடநாமுங் கழறினோமின்னந்தான்
வண்டஇந்த வாழ்க்கையைப்பாருநீ
தொண்டிடக்கொஞ்சி தொழிலையறிகுவாய்
புண்டிடபந்த பரிக்குஞ்சிபார்த்திடே (உ௱௰௪)

பறவைதோஷகுணம்-வேறு

*குஞ்சியின் உடம்புணர்ந்து
குடல்தனில் பாலுந்தங்கா
நெஞ்சையுஞ்சுழியாய் வாங்கும்
நெற்றியும் வலிப்புண்டாம்
*துஞ்சிடும் போதுசற்றே
துணக்கென வலித்துச்சீறும்
பஞ்சின்மேல் லடியினுளே
பறவையின் தோஷந்தானே. (உ௱ய௫)

பக்ஷிதோஷகுணம்.

உச்சிமூளைதனைப்பற்றி யுடல்மேலெங்கும் வெதுப்புண்டாம்
அச்சமாகநாவுலர்ந்து அதுவேகண்ணும்வெளுப்பெய்தும்
பச்சைமஞ்சள்முறித்தாப்போல் பசும்பொன்னிறமாய்முகமினுக்கும்
இச்சைபுரிந்தகுழல்மடவீ ரிதுவேபக்ஷிதோஷமிதே. (உ௱ய௬)

வேறு-அதற்குச்சாந்தி.

பக்ஷியென்றநோயினது தோஷத்துக்குப்
பரிதகட்டில்அறுகோணம் வரையீராறு
நிக்ஷித்தஇருபத்தஞ் சறைவீட்டுக்குள்
நினைவாக-ய-வ-சி-ந-ம-வென்றுமாறி
அக்ஷியதன்நடுவீனையைப் பிடித்துமாறி
அதனுள்ளேபெண்ணெழுத்து-ம-ய-வசி-யென்றிட்டு
மக்ஷியென்றஅறுகோணங் கிலியும்பூட்டி
மயேஸ்பரியைபூசைபண்ணிக் கட்டிப்போடே. (உ௱ய௭)

குளிதோஷகுணம்-வேறு.

தேயாநிற்கும் மேவெளுக்கும்
தீதேவெளுப்பு மலமொழுகும்
தாயார்முலையில் வாயைவைத்து
சற்றேயுண்ணுந் திகைத்திருக்கும்
காயாதுடம்பு கண்பிசையும்
கண்டாலிதுதான் அறியீரோ

பேயாலகண்ட தோஷமல்லப்
பெண்ணுட்குளித்துக் கண்டதுவே. (உ௱ய௮)

குளிதோஷநிவர்த்தி.

கனமாமிதனைக் கண்டுணர்ந்து
கைலைமேவி யிருவேளை
குணமாயோது சடாக்ஷரத்தைக்
குளிர்ந்தநீர்தனை மேல்தெளிக்க
வணமாயிந்நோய் வர்க்கமெல்லாம்
மாறிப்போகு மிதுதன்னால்
தினமும்வேண்டா மூவைந்து
தினந்தான்தெளிக்க நோய்ப்போமே. (உ௱ய௯)

எக்ஷிதோஷகுணம்.

தேயுமுடம்பு மிகநாறும்
செல்லாமுலையும் அருவருக்கும்
தாயைக்கண்டால் உய்த்துய்த்து
சற்றேபார்க்கும் வயிற்நோவும்
பாயும்புலிபோல் பதறியழும்
பாலகரைக்கண்டால் பார்த்திருக்கும்
பாயும்விடையோன் தானறிய
பழுதாம்எக்ஷிப் பகையென்றெ. (உஉ௰)

எக்ஷிதோஷநிவர்த்தி.

பகையைத்தீர்க்குஞ் சடாக்ஷரந்தான்
பதுமநிலையு மதுகாட்டும்
தொகையாய்த்தீர்க்கும் நோய்களெல்லாம்
துன்பமில்லை யிதுவாலே
சிகையைக்கொண்டு இழுத்தாக்கால்
செடலங்காண்பார் மீதுணர்ந்தோர்
பகையுமில்லைப் பறவைகுணம்
பார்க்கப்பொடியா மிதுபாரே. (உஉக)

நீர்மாந்தகுணம்.

தலையதநோவாய் முகமின்னி
தண்ணீர்ப்போலே மெய்குளிர்ந்து

மூலையதுமுசுவா உடம்பெல்லாம்
முத்துபோலே நீர்பாயும்
சூலையதுமுட்டி நீரிறங்கும்
குருகுறேனப்பின் வயிறுவிடும்
மலேபோல்திரண்ட மூலைநல்லாய்
வகுத்தேசொன்னோம் நீர்மாந்தம் (உஉஉ)

மாந்தத்துக்குக்கருநீலிக்கியாழம்.

மந்தம்போகக் கருநீலி
மகத்தாஞ்செவியங் கியாழமிட
வந்தநோயும் நீர்மாந்தம்
வணங்கியோடும் பண்டிதரே
சொந்தமிதுதான் அறிவீர்கள்
சொன்னமொழியுந் தப்பாது
எந்தநூலு மிம்மொழிபோல்
எவருஞ்சொல்லார் அசுவனியே, (உஉ௩)

எந்தநோயும் வரும்விதந்தான்
இனித்தபணடமுந் தேங்காய்
சொந்தவுண்டை யுளுவையுடன்
சோறும்வாளை வரால்கெண்டை
சந்த*மேதிப் பால்இறைச்சி
சருகுத்தண்ணீர் புளிமோர்தான்
வந்தபாகல் சுரைக்கதலி
வருகுமாந்த மிவைதின்றால். (உஉச)

* மேதிப்பால்-எருமைப்பால்.

தலைமாந்தகுணம்.

தலையுங்கனத்துக் குடலூதிச்
சரீரந்தன்னில் வலியுண்டாம்
குலையும்வலித்துத் தள்ளிவிழும்
குளிருஞ்சுரமும் வியர்த்துவிடும்
சிலையின்புருவந் தலைகிமிரா
சேஷ்டைமிகவே வலியுண்டாம்

மலைபோல்பருத்தத் தனத்தாளே
வாதைப்படுத்துந் தலைமாந்தம். (உஉரு)

வேறு.

மந்தமென்றவகைதீர ஏலாதியுண்டை
மைந்தனேகாட்டிடவே மயங்கிப்போகும்
எந்தவகைநோயெல்லாம் ஏலாதிதன்னால்
இறந்துவிடும்பண்டிதத்தை யூனிப்பாரு
வந்தவிதிப்பயனறியா வயித்தியோர்கள்
வாதத்திற்கெட்டலைந்து வயித்தியம்பாரார்
சொந்தமெனக்கொண்டாடிப் பண்டிதத்தை
சுருக்கெனவேபாரார்கள் சுனகர்தானே. (உஉசு)

வேறு.

வயிறுகழியும்விதம்விதமாய்
மார்பைவலிக்கும் பற்கிட்டும்
பயறுகடித்தாற் போல்தந்தம்
பதறிகடிக்கும் இசுப்பெடுக்கும்
கயிறுமுறுக்கி விட்டாப்போல்
காலுங்கையுந் தானிழுக்கும்
— எயிறுதிறக்க மாட்டாது
இரங்காதன்னந் தண்ணீரே. (உஉஎ)

— எயிறு-பல்.

வேறு.

தன்னிமையால்நோயுதித்த வாறேதென்னில்
தன்வயதுபத்தெட்டு இந்நாட்குள்ளே
உன்னிமைக்குள் தீனியினால் கன்மத்தாலும்
உடம்பிலுள்ளசூட்டாலும் வினையினாலும்
வென்னிமையால்நோயுதித்த வாறிதாகும்
விபரமென்னக்காந்தாதிக் கியாழதேற்று
சொன்னிமைக்குள்ஓடிவிடும் இக்குணங்கூர்
சூதில்லா நாலிதுதான் முந்நூறென்றே. (உஉஅ)

வேறு.

அடக்கவே பெருகஉந்தி
அதிகமாய் சுரமுந்தோன்றும்
முடக்கலு*முகடுபார்க்கும்
மூரிகோட் டாவியுண்டாம்
விடக்கமாம் இசிப்பெடுக்கும்
விளையெழுந் திருக்கும்வேர்க்கு
அடக்கவுந் தலைமாந்தத்தை
யார்அறிந் தடக்கவல்லார். (உஉக)

* முகடு-உச்சி.

வேறு.

வல்லோர்கள்நூல்பார்த்தால் வாய்க்கும்யோகம்
வழிகாண்பீர்வகையறிய தொழிலுங்காண்பிர்
துல்லோர்கள்மிதுனத்தோர் துறைத்திறனோர்க்குத்
துருவமென்றமேருவங்கே தோன்றுந்தோன்றும்
நல்லோர்கள் இந்நூலைக் கண்ணில்காண்பார்
நாதாந்தம் வேதாந்தம் நல்கவல்லோர்
வெல்லுவீர்தொகைதொகையாய் மருந்தைச்செய்து
விபரமாநோக்கிய விரண்டுபோமே. (உஙo)

காந்தாதிக்கியாழம்.

விரண்டோடகாந்தாதிக் கியாழஞ்சொல்வோம்
* மெய்யுதகப்பெருமருந்து சிற்றேரண்டம்
விரண்டோடநரிவிரட்டி—கொட்டான்சின்னி
மேலானகடுக்காவு மாசிபத்திரி
திரண்டோடபற்படகம் தான்றிமுத்தம்
திரிபலையும் அதிவிடையம் ஊசிப்பாலை
கரண்டகப்போல்கருக்கியிதை கொட்டிப்போட்டு
கருநீலிநிலவேம்பு () பொஸ்தக்காயே. (உஙக)

* மெய்யுதகம்-சிறுநீர்
— கோட்டான்-நெருக்கொட்டான்
() பொஸ்தக்காய்-கசகசாவின்தோலு.

காயோடுபத்திரியுந் தாளிசந்தான்
கருவேப்பிலையோடு முத்தஞ்சிற்றுமுட்டி
ஏயோடுநூலிடித்து அதனிற்போட்டு
இரண்டுபடிதண்ணீர்விட் டெட்டொன்றுக்கி
நோயோடு*பயிரவனுங் காந்திச்சேர்த்து
நோகாமலெடுத்தீய கனரோகங்கள்
வாயோடுபேசாமல் சர்வகணமெல்லாம்
வணங்கியேகொட்டோடும் வண்மைபாரே. (௨௩௨)

பயிரவன் பயிரவமாத்திரைக்கூட்டியிழைக்க.

கருநீலிக்கியாழம்.

பாரேநீகருநீலிக் கியாழவண்மை
பார்தனிலேவிள்ளார்கள் விண்டோமுண்மை
பாரேநீசெவ்வந்தி விஷ்ணுகாந்தி
பரும்பாலைதிருத்*துழாய்ஜனகிபூண்டு
பாரேநீபுங்கோடு மாசிபத்திரி
பனையீர்க்குவேப்பீர்க்குப் பண்பதாக
பாரேநீபுரசுமுத்தங் கொத்துமல்லி
பஞ்சமோதகத்துடனே யொன்றுய்ச்சேரே. (௨௩௩)

* துழாய்-துளசி.

சேர்த்தந்தமருந்தெல்லா மொன்றுய்ச்சேர்த்து
சிவசிவாபெரும்பாண்டந் தன்னிலிட்டு
வார்த்தந்தமணல்ஊற்றின் தண்ணீர்தானும்
வாரதிலேவிருநாழி அளந்திட்டேநீ
பார்த்தந்தஅடுப்பேற்றித் தீயைமூட்டி
பண்பாகவொருவிறட்டி கொண்டெரித்து
கார்த்திடுநீமயேஸ்பரனை தியானம்பண்ணி
காய்ச்சியதையொட்டொன்று யிறக்கிடாயே (௨௩௪)

இறக்கியோகாசியென்றக் குப்பிக்கேற்றி
என்னசொல்வேனிதன்பெருமைவிபரங்கேளு
இறச்சியந்தகுப்பியதை பதனம்பண்ணி
என்னசொல்வேனிதன்பெருமை மக்காள்மக்காள்

இறக்கியதோர்நோய்வகைகளை இயம்புவேன்பார்
எழிலில்லாகணபாண்டு கணகாமாலை
இறக்கியேகருநீலிக்கியாழந்தன்னை
இனத்தோடேபதனம்பண்ணி வைத்திடாயே. (உருரு)

குடல்வாதத்திற்கும்-உரம்விடுதற்குந் துவாலையிடதயிலம்

வேறு,

வல்லாப்பூண்டுப் பலம்பத்து
வனத்தின்கடுகு பலம்பத்து
கல்லாக்குழியின் தைலமிதை
கடுகஎடுத்துப் பதப்படுத்தி
பொல்லாநோய்கள் குடல்வாதம்
போகும்போகும் துவாலையிட
வல்லாப்பிள்ளை உரம்விழுந்தால்
வலைபோற்பூச உரம்விடுமே (உருசு)

சதிபுருஷாள்தோஷம்.

அரிவையர்க்கும் ஆண்பிள்ளைக்கும்
அதனிற்றோஷ மேதென்றும்
கருவாம்அஞ்சு மாதத்திற்
காணிற்கலந்த தாய்முகத்தை
பெருமா ளந்தபிள்ளைக்கு
பேணிகளுக்கும் வயிற்வலியும்
கருகுமுகமும் பேயின்குணமும்
கண்டுஅறிந்து செய்வீரே (உருஎ)

சதிபுருஷாளில் தோஷமேதெனில்.

ஸ்ரீ-ரு-மாதகர்ப்பமா யிருக்கிற காலத்தின் புருஷன் புணர்ந்தால் (அப்)பிள்ளைபிறந்தால் மேற்சொன்ன வியாதிசம்பவிக்கும்.

அதற்குச்சாத்தி-வேறு.

செய்யவேஅஞ்சுவர்ன மலரெடுத்து
சேகரமாம்அஞ்சுவர்ன மலரேஅன்னம்

ஐயமில்லா அஞ்சுவெள்ளிப் பணமேவைத்து
அதினுடனே தூபதீப நெய்விளக்குமேற்றி
வையமென்ற * கதலியிலே யுருவெழுதித்தான்
வறைதோறுஞ்சாப் புராணி வர்த்திநட்டு
பொய்யல்லநான்சொன்னேன் பண்டிதரேஐயா
பொதுவாகமுச்சந்தி அதில்வைப்பீரே (உரு அ)

*கதலி-வாழை

வைத்திடவேதோஷமெங்கே கிரகமெங்கே
வலியெங்கேநோடெங்கே பறந்துபோகும்
நையடியாஞ்சிசுவடியின் பருவந்தன்னை
நாட்டமுடன்கண்டறிந்து கருத்திற்பூண்டு
மெய்யுள்ளவசிஷ்டனைப்போல் பெருமைபூண்டு
மேலானபத்மகுணஞ் சாரவோர்க்கு
பையமில்லேமோக்ஷமுண்டு நகரம்போச்சு
பழிபாதகர்க்கின்றால் கிட்டிடாதே, (உரு கூ)

வேறுகலிவிருத்தம்.

குன்மவாய்வு-அ-ம்வருவிதம்,

ஏதநாங்கிது எட்டுடன்குன்மமே
போதவேகெண்டைப் புரட்டுமேவாய்வது
ஏதமிலாம வியம்பியமாமுனி
சூதுசெய்வோர் *பட்சந்தோன்றிடுங்குன்மமே. (உச0)

*பட்சம்-பக்கம்,

குன்மம்-அ-க்கும்- மருந்து

தோன்றியகுன்மம் துலையவகைகேளு
பான்றியசூதமும் பகர்கந்திலிங்கமும்
வேன்றியகழற்சிப் பருப்புடனுவியும்
ஏன்றிந்துப்புக்*காரம் இயல்சீனக்காரமாம். (உசக)

* காரம்-வெண்காரம்,

மாலர்தாரமும் மஹா * திரிபலை
ஏலம்திரிகடுகம் விருகனும் ஏன்டதாய்
கோலக்கள்ளிக் கொழுந்தின்சாற்விட்டு
மாலையுங்காலையும் நான்மூன் றும்மாட்டிடே. ௨௪௨

* திரிபலை-கடுக்காய்-தான்றிக்காய்-நெல்லிக்காய்.

ஆட்டியுலர்த்தி யமர்ந்தபற்பத்தை
எட்டிக் * கோவெண்ணேன யிலைழ்ந்துநாள்மூன் றுகொள்
கேட்டுக்கேட்டந்த நோய்வகையெட்டுமே
பாட்டும்பட்டோடிப் பறந்திடும்பாருமே, ௨௪௩

* கோவெண்ணெய்-பசுவின்வெண்ணெய்.

பாருஞ்சிசுவதை பாவத்தைச்செய்தபேர்
ஆருமறியவேயாஞ் சொல்வோங்கேண்மக்காள்
நீரும்அபானத்தில் நின்றுபொறிகொண்டு
சோருமூலத்தில் சூடுண்டாகுமே, ௨௪௪

உண்டானவிந்து ஒடுங்கியொழிந்துபோம்
திண்டான * மூவருந் திகைத்திட்டு நிற்பார்கள்
கண்டோமதுவென்றால் காசுநியகீசுபாய்
விண்டோமுண்மையை விளம்புவோமின்னங்கேள்
நண்ணவமூலம் நாசமதாகுமே. ௨௪௫

* மூவர்-வாதபித்த சேஷ்மம்.

நவமூலத்துக்கு மருந்து.

ஆக்கியமூலம் ஒன்பதும்ஓடிட
பாக்கியமொன்று பண்பாயுரைக்கக்கேள்
தாக்கியபூரம் * தாள் () சிலை () காரம
தேக்கியகல்நார் சேருங்ஐந்துமே. ௨௪௬

---

* தாள்-தாளகம்
() சிலை-மனோசிலை
() காரம்-சீனக்காரம்.

ஐந்தும்ஒருபலம் ஆகநிறுத்து
பந்துக்கொடிக்கள்ளிப் பாலைவிட்டாட்டிடு
வந்தாட்சென்றபின் வழித்துக்குகையினில்
சந்துவாய்ச்சீலை தடித்தமண்போட்டிடே. ௨௪௭

போட்டெடுக் () குக்குடம்பொருமுஞ்சாக்கது
ஆட்டிடுகல்வத்தில் ஆவின்பால்கள்ளிப்பால்
வாட்டிடுசேரமம் இரண்டதுவாகவே
நீட்டிய () சம்பழச் சாறுவிட்டாட்டிடே, ௨௪௮

() குக்குடம்-கோழியளவுபுடம்.
() சம்பழச்சாறு எலுமிச்சம்பழச்சாறு.

சாறுங் () குமரி கையாந்தகரைச்சாற்
தூறுயரைத்துத் தூதுளங்காய்போல்
ஊறுயுலர்த்தி யுறுபலங்கொண்டிட
தாறுயொன்பதுந் தாண்டிப்பாருமே, ௨௪௯

() குமரி-கற்றாழை.

வேறு,

பார்தனிலேநவமூலம் பறந்துபோச்சு
பயனறிய இன்னமொன்று பகருவேன்கேள்
ஆரறிவாரிந்நூலை மூன்றுநூறு
அவனிதனில்கிட்டாது கிட்டிலையா
பேரறியதர்மசிவ யோகியென்று
பேர்பெரியலோகத்தில் புகழ்வாரப்பா
மாரறியப்போறூர்கள் இந்நூல்மார்க்கம்
மகத்தானதவத்தோர்க்குக் கிட்டுமென்றே. ௨௫௰

கிட்டினாலென்ன நூல்பார்த்தென்ன
கிரியைகற்றும்பொருளறிந்தும் பலன்தானென்ன
மட்டில்லா இரக்கமில்லாதபேர்க்கு
வாய்த்திதென்னமாய்ந்தென்ன வரிசையில்லார்
தொட்டிடமும்விட்டிடமும் யாதோஏதோ
... ரத்னமாணிக்க அம்பாள்போற்ற

மட்டவிழ்மலர்க்குழலாய் வகுத்துரைத்த
மகிபதியைக்கண்டுணர்ந்து வணங்குமுத்தே. உ௫௧

கொடியாம்பல் மகோதரம் கிராம்பல் பாய்ச்சல்.

குஷ்டத்துக்குரவுத்திரகாளிக்கியாழம்;

வேறு-தாழிசை.

இதுசந்தவிருத்தமாகவழங்கும்.

வணங்குமுறையினி யாவரும்பேறுபெறுமுறையை
விசனத்துடனழிவித்தனர்க் கியாழமதைச்சொல்வோம்
வணங்குமரிகொடிவேலியுஞ் சிறுதேக்குடன்முத்தம்
வண்டோதரிசீதேவியுங் கண்டாத்திரிவசம்பும்
வணக்குன்றியுமரவாழையுங் தழுதாழையுஞ்சின்னி
வசிபாலையுமுட்பாலையு நீராரியநெருப்பும்
வணசங்குடன்சிறுபாதமும் பெரும்பாதமுமொக்க
பணிதாங்கிநாப்பாகலும் ஐவேலியும்வாங்கே. உ௫உ

கெவுடாதுடன்கெடுமாதனை கொடிபாசையும்அரத்தை
கேள்தும்பையுந்தாளீசமுங் கொத்தமல்லிமிளகும்
நெடிதியாவையும்பலமொன்றதாய் நிறையாகவேவாங்கி
நீருப்படிபதக்காகவே பாண்டந்தனிலூற்றி
வரையாகவேதீமூட்டிகீ வடிகன்றனைபூண்டு
வசனித்ததிலொன்றாகவே சாடிதனிலூற்றி
குறையாதெனநிற்கும்பலங் கொடிய () நிம்பப்பட்டை
கொண்டேயிதில்மறவாயிவை தூளாயிதைசெய்யே. உ௫௩

() நிம்பப்பட்டை-வேப்பம்பட்டை.

வேறு.

செய்தந்தசட்டிதனில் தூளைத்தாவி
செயம்பெறவேபதனமதாய் பண்ணுபண்ணு
கொப்ததிலேகரண்டிசலம் உள்ளேகொள்ளு
கொடியமகோதரம் கிராம்பல்பாச்சல்
வையகத்திலுள்ளபரி சனங்கள்குஷ்டம்
வாசமுடன்அக்கினியா மந்தத்தோடு

சையோகம்செய்த சண்டாளரோகம்
சண்ணுண்டேபோகுமிதில் சத்தியம்பாரே. ௨௫௪

பாரென்றுசொன்னமொழி யிந்நூல்மார்க்கம்
பார்தனிலேகாட்டார்கள் பலியாதென்று
சீரென்றரத்தினமாஞ் சுருக்கந்தன்னை
சிமிட்டுவித்தைதடியன்றெண்ணி செகத்தில்போட்டார்
ஆரென்றகாலறிந்து குலத்தைப்பார்த்து
அவன்குணத்தைமுழுதிலுந்தான் சோதித்தேறி
வாரென்றஅநித்தியமாங் காலந்தன்னில்
வரிசையுள்ளபாலருக்கு ஈவாய்ப்பாரே. ௨௫௫

ஈயாதமூடருக்கு ஈந்தாயாகில
எழுநரகந்தனில்வீழ்ந்து அலைவாய்பாவி
ஈயாதகசடருக்கு ஈயவேண்டாம்
என்றீயாப்பொருளதனை நினைக்கவேண்டாம்
ஈயாதகாமுகர்க்கு ஈயவேண்டாம்
ஈந்தாக்கால்நரகெய்துவன் சொன்னேன்சொன்னேன்
ஈயாப்பொருளதனை யீயச்சொன்னேன்
ஈயாதகாரியங்கள் செய்யாதென்றே. ௨௫௬

தாழிசை.

ஈயாநெறிதாழிசையை யியல்பார்ப்பதுமெளிது
ஈயாப்பொருள்கனலாவதை இயம்பவதுகூடா
ஈயாநெறிகோயாளியை யேர்ப்பார்ப்பதுமெளிது
ஈயாதவனுப்கண்டது வகலாதுபாரே. ௨௫௭

மூதண்டகியாழம்,

பாரேயினிமூதண்டமே பகாஇனிமக்காள்
அறுகாமதுவெகுசாலமே அதுகண்டதைவாங்கு
சேறுநெல்லியும்சிறுவோரிதழ் நிலதாமரையதுவும்
மருவோகரவடவாலையு மிளகோடதுசுக்கே. ௨௫௮
சுக்காகியமதுரத்துடன் கோஷ்டமதுகாரம்
வக்காகியஇரிபாலையும் வரயாம்விட்டுணுகாந்தி

திக்காகியபெருமுட்டியுஞ் சிறுமுட்டியுங்கூட்டி
மக்காகியகுறுக்கேயதை மடியவவையிடியே ௨௫௬

இடியேசலம்படிமூன்றதாய் அளந்தேகுடமூற்றி
படியேமரமொருசாதியாய் கனலையதில்மூட்டி
வடியேயெண்பங்கி லொருபங்காலதைவடித்து
குடியேயதிகாலையிலு மாலையிலுமாக
ஒருமண்டலம்சோரகவே உண்ணவதின்குணமே ௨௬௰

குணமாமதுபயித்தியவினை குணமாம்விஷப்பாண்டு
குணமொருக்ஷயமெட்டுடன் கோரகீராம்பல்
குணமாமதுவாய்வெண்பது கொடியவினைமூலம்
குணமாமதுகியாழுவகைக் கூறவொண்ணாதே ௨௬௧

மேகம்-உ௰-க்கு-கிருதம்.

ஒண்ணாகவேயினியொன்றினை ஓஹோயினிக்கேளு
ஒண்ணாவதுவல்லாரையும் பொன்னாங்கணிகையான்
ஒண்ணாவதுநருந்தாளியுங் குமரியுடன்கொவவை
ஒண்ணாகிபபுளியாரையும் உத்தாமணிசுண்டை ௨௬௨
சுண்டையுடனென்றுர்நீவபடியாகவேயளந்துக்
கொண்டேநெய்க்கொடிதேனுடனே கோவினுடபாலும்
பண்டேயதின்காயலூருட வெல்லத்துடன்பாரும்
தண்டேயினிகடையுள்ளது சரகதையினிகேளே ௨௬௩

வேறு.

கேளப்பாகிராம்பேலம் சாதிபத்திரி
கெஞ்சாவித்ததிமதுராம்வெட்பாலைமுத்தம்
கேளப்பாஇந்திரமாங் கோபப்பூச்சிக்
கேள்மகனேசாதிக்காய் லவங்கப்பட்டை
கேளப்பாமிளகுசுக்கு சீரகத்தினோடு
கொடி*கட்டைசந்தனத்தூள் ()வெட்டிக் ()கொர்சி

* கட்டை—அகில்கட்டை.
() வெட்டி-வெட்டிவேர்.
() கொர்சி-கொர்சிமஞ்சள்.

கேளப்பா அக்கிராகாரஞ் சிற்றரத்தைக்
  கெட்டியாய்வகைக்குஒரு பலந்தான் தூக்கே. ௨௲௪

தூக்கியேயிளவறுப்பாய் வறுத்திடித்து
  துப்பானதேனுடனே கொட்டிக்கிண்டி
காச்சியே அப்பாலே யிறக்கிக்கொண்டு
  கணபதிக்கும்வல்லபைக்கும் வணங்கிப்பூசி
போக்கியேகிருதமதை பூசித்தேதான்
  பூவைக்கும்மனோமணிக்கும் போற்றிசெய்து
பாக்கியந்தானிதையெடுத்துக் கழஞ்சிபுண்ண
  பறந்தோடும்வினைபதனைப் பகருவோமே ௨௲௫

பகரயிலேமேகமொடு கிரந்திசூலைப்
  பறங்கிப்புண் அரையாப்பு * வாழைசூலை
நகரயிலேபவுத்திரங்கள ஆசனமாம்புற்று
  நாசமாங்கன்னவித் திரிதிசூலை
மகாயிலேதவடைபுற்றுப் பக்கச்சூலை
  () மடிப்புற்றுலிங்கபுற்று யோனிப்புற்று
வகரயிலேசூலைரணம் சூலைவாய்வு
  வாய்ப்பேசாதோடுமே மருந்தில்பாரே, ௨௲௬

* வாழை-தொடைவாழை.
() மடி-வயிறு.

## வேறு.

மருந்தானசூக்ஷ மகத்துவங்கோடி
  அறிந்தேயிதனை யாடியபண்போர்
முழுதுமேலோக முறையிடுமையோ
  பழுதுவராது பார்த்திடுமகனே ௨௲௭

மலட்டுரோகம்,மேகம்,குஷ்டத்திற்கு
உலோகசெந்தூரம்.

பார்த்திட இன்னம் பகருவோம்சூக்ஷம்
  ஆர்த்திட * லோகம்அரைப்பொடி () சீனம்

* லோகம்,அயம்
() சீனம்,படிக்காரம்,

கார்த்திடசாரம் கடுங்காரசுண்ணமும்
வார்த்திட*அண்டவோட்டிவிட்டாட்டிடே உசுஅ

* அண்டம்-கோழிமுட்டை.

ஆட்டியுலர்த்தி அகலில்போட்டந்த
எட்டையுலர்த்தி பெருசிலைசெய்திடு
காட்டிமுட்டந்த காடாக்கினிபோல
மாட்டியுடைத்து மறுதரமாட்டிடே. உசுகூ

ஆட்டிடுவிந்திட்டு அரைப்பதுசாமம்
காட்டிடுகந்தியுங் கடுநாடுசூதமும்வீரம்
ஆட்டிடுபொற்றலை யரைத்திசாமமாம்
வாட்டித்தணலில் வைத்திடுகுக்குடம், உஎ0

குக்குடம்போடு கூர்முருக்கம்பூப்போல்
ஒககமுடியாது உலோகசிந்தூரந்தான்
பக்குவமுறவேபகுத்துண் போர்சித்தத்தில்
தக்கஓர்பக்கில் தரணியுங்கொள்ளாதே உஎக

கொள்ளமகிமையைக் கூறுவோமின்னங்கேள்
எல்லாபலமெடன இயம்புமனிதர்கள்
சொல்லியறியநீ தொட்டிடுகாசெட்டை
கல்லினும்பாலன் கதறுமிதில்பாரே உஎஉ

பணவெடைகொண்டிட பார்தகரோகம்போம்
கனவிலுங்காணக் கிடையாதுபாருநீ
அணுகியகுஷ்டம் அரிவைதன்மேகமும்
வணங்கியவெட்டைப் புடைகளுமாறுமே, உஎங

நவலோகசெந்தூரம்.

ஆறிட இன்னம் அறைகிறேன்கேட்டிடு
பாரிடைவெள்ளிப் பொடியுடன்லோகம்
சாறிடதங்கம் அரைக்காலுமாகவே
வாறியகல்லில் வதட்டியரைத்திடே உஎச

ஆட்டிடுசூதம்ஐந்துப் புச்சேர்த்திதை
காட்டிடு * சம்பழுங் கால்படிவார்த்தரை

* சம்பழம்-எலுமிச்சம்பழம்,

வாட்டியெடுத்து வழியக்குகையினில்
பாட்டியசீலை பண்ணஞ்சசெய்திடே. உஎரு

செய்துமே * முட்டைக் கஜபுடம்போடு
அய்துமேதப்புடம் ஆறிஎடுத்திடு
கைதசெந்தூரங் கதிர்மதியொப்பாகும்
ஐயதெவ்வித மவ்விதமறிவீரே உஎசு

* முட்டை. எருமிட்டை

வீரமிதாலேவிரண்டிடும் நோய்வகை
சாரமாக்கொண்ட கூடியமுடனீரையும்
வாரகண்தேகம் வல்வினைசேட்டுமம்
போரநீர்க்கட்டுச் சதைக்கட்டுமிக்கட்டே உஎஎ

கட்டுமலத்தைக் கனத்தநீர்ப்பந்தக்கை
தொட்டுநீர்ச்சுட்டக் கிரந்திப்பிரமியம்
வெட்டைக்கிரந்திகள் விரையினிற்பொத்கலல்கள்
சட்டுப்பட்டெனவே சதையுமிதுதின்றால் உஎஅ

வங்கசெந்தூரம்

இன்றிட்டவின்னஞ் செந்தூரமுரைக்கிறோம்
கன்றிட்டவங்கம் கடிபமதனுசிலை
வென்றிடச் ‡ சத்துவீரமுந்தாரமும்
ஒன்றிபஐந்தும் ஓர்பலமவாங்கிடே. உஎசு

‡ சத்து சிலாசத்து

வாங்கியேகல்லில் வகையிதைபோட்டிடு
தாங்கியரைக்கத் தக்காளியைவிட்டுவி
ஓங்கியொருசாமம் உரைக்கவரைத்திடு
பாங்கிய மேனிப் பசறதைகூட்டிடே உஅ0

‡ மேனிப்பசறு குப்பைமேனிச்சாறு

கூட்டிய அண்டநீர்க் குலுங்கவைத்தாட்டிடு
பாட்டினில்வில்லைப் பணம்போலேசெய்திடு
காட்டிக்கனலில் கதறவைத்தாட்டிடு
ஆட்டிடும்வில்லையை யகலதில்பாய்ச்சிடே உஅக

பாய்ச்சியமண்ணைப் பதுங்காகப்பூசிடு
காய்ச்சிவந்த கதிர்மதிவைத்திடு
வாய்ச்சியவைத்தே வரப்புடம்போட்டிடு
ரேய்ச்சியவெந்த செந்தூரங்கண்டிடே (உஅஉ)

காணவேவெண்ணெயில் கடுகுபோல்தின்றிட
தோணுமேமேகந் தோன்றுநீர்ப்பாய்ச்சலும்
வேணவேபித்த வெட்டையுங்காந்தலும்
தாணுவேயண்டத் தலைவலிபீநசம் (உஅங)

வலிபொடுகுன்மம் வாய்நீர்க்குன்மமும்
பலியிடும்ரத்தக் கிரிச்சினம்பாளையும்
சலிய தனிசயித்தியசேட்டுமம்
விலியொடுகண்ட வித்திரிபம்போகுமே (உஅச)

போகுமேயிந்த பெருமைவங்கத்தை
வாகுடம்சொன்னோம் வரிசையறிந்திடு
பாகவேமுவரும் பதுங்குவாரித்தால்
ஆகமேயறிப அரன்செயல்கண்டிடே. (உஅரு)

விந்துஸ்தம்பனம்.

கண்டிடக்குன்றிக் காயையரைத்துநீ
தின்றிடுகல்லெண்ணெய் செந்தூரம்வைத்துநீ
கொண்டிடுக்கேட்டக் குறைச்சலாங்கண்ணிகள்
நன்றுநகைப்பார் நளினப்பெண்களே. (உஅசு)

பெண்டுகள்கெட்டப் பேதைதாழத்தால்
ஆண்டுகள்பண்ணுந் துராக்கிரமெசித்தினி
கண்டுநகைக்க சடமெடுக்காதே
மூண்டுமுன்சொன்னமொழியைதின்றிடே (உஅஎ)

தின்றிடுமூவகை சாதியாங்கன்னிகள்
அண்டியுனைவிடார் அல்லும்பகலுமே
கண்டுசுக்கில ஸ்தம்பனம்போலவே
என்றுமொழுவர் இயம்பிடார்பாருமே, (உஅஅ)

பாருஞ்செந்தூரத்தைப் பணவெடையாகவே
கோருமேமண்டலங் குன்றியிற்கொண்டிடு
தாதுமேபற்றிப் பெருகியிறுகிடும்
மாதமேசென்ற மறைப்புரையாறுமே. (உஅகூ)

ஆருமறியவே யான்சொன்னபோக்கெல்லாம்
நேரறியாதவர் நிலையில்லாப்பாவிகள்
பேரையுரைக்கப் போகாதவரிடம்
ஞானமறிகின்ற நன்மையுள்ளோர்க்கிதே. (உகூய)

நன்மையுந்தின்மையும் ஞானமுமார்க்கமும்
வண்மையுந்தன்மையும் வஞ்சனைபேதமும்
உண்மைபேயொன்றதா யுகந்துசெய்தவர்க்கு
நன்மைவிரும்பினர் நன்றியாமுத்தியே. (உகூக)

நவநீதசெந்தூரம்.

முத்தியுண்டின்ன முப லுவோங்கேளு
பத்தியாய்வெண்கலப் பாறையைவாங்கிநீ
வெற்றியாம்பூரம் விளங்கியவீரம்
சத்தியும்விந்துவுஞ் சிங்கியும்காரமே. (உகூஉ)

காரமாஞ்சீனம் கடுகியிந்துப்பு
வாரஅவையத்தின் அண்டத்துஓடதும்
சேரஇனியொக்கச் செய்பலமொன்றதாய்
காரையின்கல்லில் கரையவரைத்திடே. (உகூங)

அரைத்திடுவெண்கரு அஞ்சுநாள்மட்டும்
அரைத்திடுசம்பழச் சாற்றினால்சாபந்தான்
அரைத்திடு - ாற்றலை ஆறுநாள்மட்டுமே
திரைத்திடுகாசுபோல் திகட்டியலட்டிலே. (உகூச)

லட்டொடுதான்பில்லை யொருசட்டிமூடியே
பேட்டிடுமண்ணது பெருஞ்சீலைசெய்திடு
காட்டுரவிதனிற் கடுகப்புடமிடு
சீட்டியாபைங்கரன் சேவடிபோற்றியே. (உகூரு)

போற்றியெடுத்துப் பூவையைப்பூசிநீ
ஆற்றியசெந்தூரம் அருணனைப்பாகுமே

பூற்றியகுண்டலிற் பூவையர்க்கீய்ந்திட
காட்டில்தீக்கொண்ட கதையொப்பதாகுமே. (உசுசு)

ஒப்பானஎண்பதும் ஓடிடும்பாருநீ
முப்பானதர்தரோய் முப்பத்திரண்டுமே
அப்பானமேத்திரவி பாதிஆனேகம
சொற்படிகண்டுச் சுழன்றோடும்பாருமே. (உசுஎ)

* எண்பது வாதம் அம்.

பாருமேகாசியில் பண்புடன்புற்றுகள்
தேரைநோய்க்கொண்டதிற் சேலைமாற்றிருக்கும்
ஆறுமறியவேயான்சொன்னஉண்மைகள்
பாருமிதுதன்னைப் பண்டிதருஞ்செய்வோரே (உசுஅ)

ஜெகஜாலமை

செய்யவேயின்னம் ஜெகஜாலவித்தைகள்
பொய்யல்லசொல்வேன் புனிதர்க்கும்போகிக்கும்
ஐயமேதாண்மையும் வீர்முமற்றவர்
மெய்யிது நூல்முறை மென்மேலும்பார்த்திடே. (உசுகூ)

மேலதாய்கற்றுமெளியர்க்குமிவ்விடம்
காலதாய்தேடக் குழந்தையறிகுவார்
மூலமதுவே மொழியினிகேளு
கோலமதாகிய கொத்துடனுடுமே. (நூ)

ஆடவேயின்னம் ஆந்தைக்கண்பூனைக்கண்
மாடவேகாகம் மலைஓணான்பித்ததும்
நீடவேநாலும் நிகழவரைத்துநீ
கோடல்ல*ஆசியில் கொடியிதை அப்பிடே (நூக)

* தூசு-சிலை.

அப்பிரவிதனில் ஆறுநாள்போட்டிடு
தப்பிதமில்லைதான் தவமதாய்செய்குவீர்
மப்பி*யண்டோட்டையண்டமாக்கொண்டுநீ
நப்பியசட்டி பகலினிற்போட்டிடே, (நூஉ)

* அண்டவோடு கபாலஓடு.

போட்டதுபேயென்று எண்ணெயும்வாத்துநீ
காட்டிடுதீபத்தைக்கதிரோட்டைமூடியே
காட்டது-கிரீயும்-இரீயும்-ரீயுமாய்
சூட்டதுலக்ஷம் தோத்திரஞ்செய்திடே. (௩௱௩)

செய்துநீபோட்டைத் திறந்திடும்போதினில்
நைதிய*பூரம் நல்கும்புனுகுடன்
சைதியசந்தன சாந்துகஸ்தூரியும்
பொய்தியகுங்குமப்பூவுடன்வங்கமே, (௩௱௪)

*பூரம் பச்சைக்கர்ப்பூரம்,

வங்கமொன்றாகவே சாரித்து ஒன்றதாய்
தங்கச்சிமிழினில் தாக்கிபடைத்திடு
பங்கமசியென்று பாருநலட்சம்
குங்குமலாடமே கூறும்பணவெடை (௩௱௫)

பணவெடைபோட்டிட பதினே பூலோகமும்
உனைவிடாதுண்மைதான் உகந்துபாருநீ
தனைவந்துசுற்றுவார் தன்மையாமிக்கரு
மனையூருமோகன வசியசித்தாடுமே, (௩௱௬)

சித்தாடஇன்னமுஞ் செப்புறேன்மக்காள்
வித்தையாலோகவிசிதந்தான்முன்னமே
கொத்துடனருங் குறியைவிளம்புவோம்
பத்தினிசொன்னறைப் பகருவோம்பாருமே. (௩௱௭)

ஜெகஜாலமை.

பாருமனேசிலையிந்திரகோபமும்
சேருமதனப்பூ செங்குழியானையும்
சாருமேயீப்புலி சந்தனங்கிராம்புதான்
மாருபொன்னூமத்து மாஹாகிரிலொட்டியே (௩௱௮)

நின்றுதொட்டால்வாடி நின்றுசிணுங்கியும்
மன்றயக்காந்தமும் மாடையாமுட்டையும்
தென்றறி அட்டையுஞ் செம்போத்தின்பித்தும்
துன்றமுதற்பிண்ட தொல்லைமாக்கருவென்றே (௩௱௯)

மாக்கருக்கோட்டான் பதனக்கருவி
தாக்கதிருபதுங தானெக்கவிருகன்
தூக்கியொன்ருன்று சூக்ஷமதாக
ஆக்கியேஅகலிட்டரைத்திடக்கேளென்றே (௲௰)

கேளேயிவையெல்லாங் கெவுரிகாராம்பசு
வாளேஅங்கெப்விட்டுமடங்கைதயர்சிலையில்
தாளேதலைப்பிள்ளை ஒட்டினில்தீபமாய்
மாளேயானைக்கண் சட்டியில்மைப்பற்றே (௲௰௧)

௲௰வது செய்யுளில் அரைத்திடக்கேளென்றே யென்றநாலு கன்னிகைநாதங்கூட்டவென்று சிலபிரிதிகளிலெழுதி யிருக்கின்றன. இதைசெய்பவர்கள் கவனமாய்செய்யவும்

வேறு

அவனியென்றஉலகமெல்லாஞ்சித்தராடும்
ஹாஹாஇதுபோல யார்த்தான்சொன்னர்
மெவணியென்றஸ்ரீவசியஞ் சிணத்திற்சித்தி
மேன்மேலாயிருந்தவிடமேவியாடும்
புவனமெல்லாமெச்சுமிந்த ஈட்டைபோலே
புகழார்கள்சித்தரவர் லோகத்துள்ளே
தவனிலையோர்வேந்தருக்கு அமுரிதன்னில்
தாம்பூலந்தனிலிடவே வகைசொல்வேனே (௲௰௨)

சொல்லலுமுன்வார்த்தைக்கு எதிரொன்றில்லை
ஜெகஜாலமுழுது மிந்தஈட்டாலாச்சு
அல்லுரவிமுழுதுமுனைகாணவிட்டால்
அந்தரஇடிவிழுந்தப்போ லேங்கிற்பார்
வெல்லடாலோகமெல்லாம் வித்தைக்கொண்டு
விளையாடும்பாண்டிதருக் கிதுதான்வேணும்
கல்லுமேகரைகரைந்துமயங்கிப்போகும்
காண்காஷிவிநோதஜெகஜாலமாமே (௲௧௰௩)

கண்டாலோஇந்நூலை ஜகத்திேனார்கள்
கையாடுந்தொழில்முறைமைகனகம்போலாம்

விண்டேனன் அசுவனியே வெளியாயிந்நூல்
வேதாந்தபண்டிதமாம்விளம்பசுசன்
கொண்டனே குழந்தைபரியாராயாக
கூறினேன்முந்நூறுய்க்குவலயத்தில்
தெண்டுசெய்யும் நோய்மருந்துதொகுதியாக
தொகுத்திட்டேன்முந்நூறிலநந்தங்கோடி (௩௱௰௪)

கோடியென்றவிதியாலே யறிவைக்கண்டு
குகைக்குள்ளேகற்பமுண்டு சமாதிபூண்டு
கோடியென்றவயித்தியர்க்குச் சிலாமணியாயிந்நூல்
கொட்டினேன்முந்நூல்மேல்சொச்சம்பாடி
கோடியெனிற்சமஸ்கிருதம் விளம்பிமுன்பு
கொட்டியபின்தமிழ்மொழிக ளநந்தமாட்டி
கோடியென்றமுழுதுமுற்றுங் கண்டறிந்தால்
குவலயத்திற்குருவெனலாங் குஞ்சரத்தின்முற்றே (௩௱௰௫)

முற்றுமுதல்தலமறிந்து முறைமையாக
மொழிந்திட்டேன்பூரணமாய் சிசுவின்னேயை
முற்றுமுதல்குஞ்சரத்தி னருளினாலே
மோஹோஹோஉறைக்கஇனிபெருநூல்மார்க்கம்
முற்றுமுதல்திராவகங்கள் தயிலப்போக்கும்
முப்பூவில் திராவகங்கள் முறைமையெல்லாம்
முற்றுமுதல்திரைக்காட்டை யறுத்துயானும்
மொழிந்திட்டேன்மூந்நூற்றின்சொச்சமென்றே (௩௱௰௬)

மிளகுதிராவகம்.

முத்தியாய்கார திராகவத்தைச்சொல்வேன்
முத்தமொடுமிளகுவகை பலந்தான்பத்து
சிற்றரத்தைப்பலமஞ்சு சீரகமோவஞ்சு
சிவசிவாநால்வகையு மொக்கச்சேர்த்து
இத்தனையும்பழங்காடிப் படியோஅஞ்சு
என்னசொல்வேனதிற்கலந்துபாண்டத்திட்டு
பத்தியுடன்கணபதிக்குப் பூசைசெய்து
பாலைபதுமேல்மூடி பதங்குபூசே (௩௱௰௭)

பூசியபின் அடுப்பேற்றிக்குப்பிவைத்து
பொருமையாய்சாமமொன் றெறித்தீராகில்
ஈசியேயிறக்குமது திராகவந்தான்
ஏகாந்ததிராகவத்தை யென்னசொல்வேன்
நேசமதைமறவாதே பண்டிதத்தில்
நேசமதாய்பூசித்து பதனம்பண்ணு
வாசியைக்கொண்டெழுப்புமிந்த வாலைபோக்கு
வையகத்திலிப்பாகங் கிடையாதென்றே (௩௱௰௮)

கிடையாததிராவகந்தான் குளிர்ந்தநீரில்
கேள்பணம்போல்கொண்டிடவே யென்னசொல்வேன்
கடைமாறிக்காலனைத்தானெறித்துசாடி
கனலெழும்பிசீதளத்தைக் கலக்கிப்போடும்
வெடிமாறும்வெந்நீரிற் கொண்டாலப்பா
வேகமென்றசுரமெட்டெட்டும்போகும்
குடையெழும்பிபயித்திய சீதளநோய்வாங்கிக்
கூண்டோடேகதறிவிடு மின்னங்கேளே (௩௱௰௯

ஓமதிராவகம்

இன்னங்கேள்ஓமமது பலந்தான்பத்து
என்னசொல்வேன் அமுரிதனில்கலந்துவைத்து
இன்னங்கேள் அஞ்சுநாளூறிப்பின்பு
எடுத்துமுன்போல்வைத்துதிராவகத்தைவாங்கு
இன்னங்கேள்சீதளநோய் உட்ணமூலம்
எடுத்தெறிக்கப் போடுகின்றசுரமும்போகும்
இன்னங்கேள்பதின்மூன்று சன்னிக்காகும்
இதன்போக்கையென்னாலே யியம்பொண்ணாதே ௩௨௰

உப்புதிராவகம்

உண்ணுதுஉப்புதிராவகத்தைக்கேளு
உத்தமனேஉப்புதிராவகமுண்மையாகும்
ஒண்ணுதுகல்லுப்பு இஞ்சிச்சாறிரண்டும்
உண்மையாய்விண்டுவிட்டோம்வகைக்குபலமெட்டு

ஒண்ணுதுரவிபுடமாய்பத்துநாள்வைத்து
உத்தமனேவாலைதிராவகமாய்வாங்கி
ஒண்ணுதுசீசாவி லடைத்துக்கொண்டு
உத்தமனேநோய்மனிதர்க்கீய்ந்திடாயே (௩௨௧)

வேறு.

ஈய்ந்திட இன்னம் இயம்புவோமக்காள்
ஆய்ந்திடத்தாம்பூலத் தடவியேதின்றிட
வாய்ந்துமேயிளை க்ஷயகாசஜெய்பமும்
போய்ந்தியிற்காணுமற் போகுமிதென்றே (௩௨௨)

போகுமிந்நூல்போல் புகழவுமில்லை
ஆகுமிந்நூலிலறிவாரறிவுளோர்
தேகமிந்நூலில் தேளியுமிதற்குள்ளாய்
வாகமபோத வரிசையிதென்றே (௩௨௩)

வரிசையாய்ச்சொல்லுவோம் வகையினிகேளு
பரிசமரம்விந்து பிராணயமெல்லாம்
தெரிசிக்கவாகும் தெளிவிந்நூல்பார்த்தால்
பிரிசமாமிந்நூல் பேசியிட்டேனே (௩௨௪)

பேசியபோது பிறவிநோயெல்லாம்
தூசினமாகுந் தொடுத்திந்நூல்பார்த்தால்
காசியில்முத்திக் கடாட்சமுங்கிட்டும்பார்
மாசில்லாநூணு மருவியேபார்த்திடே (௩௨௫)

பார்த்திட இன்னம் பகருவோங்கேளு
வார்த்திடவா லுழுவைபுஞ்சிரகம
கார்த்தசிரகம் கானகசீரகம்
ஆர்த்திவகைக்கு அஞ்சுபலமேன்றே (௩௨௬)

பதமாயிடித்துப் பகருவோங்கேளு
அதமாக்கருவாப் பட்டைப்பலம்பத்து
விதமாங்காயலூர் வெல்லம்பலமஞ்சு
சதமாமிதற் கிரட்டிசலமென்றே (௩௨௭)

சகலமிட்டுவாரமொன்று ரவிதனில்
சகலமதுபாண்டஞ் சரியாய்நிரைத்திட்டு
சலமதின்வாயை சதுரத்தில்மூடி
சலமதுசந்து சீலைகட்செய்யே (௫௨௮)

செய்துநீதியைத் திறமதாய்மூட்டி
கொய்நமேசாமங் கொண்டதில்திராவகம்
வைதுமேயமூர்தம் வழியுமதுகண்டாய்
மைதுமித்ற்கு மனோமணிபூசையே (௫௨௯)

பூசித்துக்கொள்ள போறிகுணநோயெல்லாம்
வாசித்துஓடும் வலுமைவிதுகண்டால்
நேசித்துநேம நிராமயமாகநீ
வாசித்துகற்கம் வண்மையநேகமே (௫௩௰)

வண்மையர்யிந்நூல் வையகந்தனினில்
தண்மையாய்ச்சொன்னோம் தாக்ஷண்யமாகவே
உண்மையாயிதனை யுரைத்தப்படியே
பெண்மையாய்சித்திப் பெறுவீர்பண்டிதரே (௫௩௧)

பண்டிதரிந்நூல் பார்த்தபண்பேர்கள்
அண்டியவரை யடுத்துபூசித்து
நன்றாய்நமஸ்கரி நாள்பனிரண்டாண்டு
தொண்டுகள்செய்திந்த தொகுதியைவாங்கிடே (௫௩௨

வாங்கியவரைவகை மோசஞ்செய்திடா
தீங்குவந்தெய்தும் திடமென்றுபாருநீ
பாங்குடன்சொன்னபக்ஷமிதுதனை
பாங்குள்ள்மானிடர் மறந்திடார்பாருமே (௫௩௩)

பாருமின்னென்று பகருவோம்பிள்ளாய்
தேருமிதனில் எக்ஷணிப்பாட்டில்

ஆருமறியவே யாஞ்சொன்னோமுண்மைதான்
கூறிதுகண்டவர் குவலயசித்தரே (௫௰௪)

## சாதிபத்திரிதிராவகம்.

சித்திரமாயொன்று செப்புறோங்கேளு
பத்திரிசாதிக்காய் கிராம்புடனேலமும்
கத்திரிவித்துடன் * கற்பகவெல்லமும்
மத்தித்திடித்துநீ மைபோலேதெள்ளிடே (௫௰௫)

* கற்பகவெல்லம்பனவெல்லம்

தெள்ளிநீயாவின்மோரைக்கலந்து நீ
கொள்ளுதுபாண்டங்குறைபடாவார்த்திடு
நள்ளியவாயை நன்றதாய்மூடிநீ
மள்ளிமடிப்பில் மகிமையாயேற்றிடே (௫௰௬)

ஏற்றியெரித்திடு இன்னமுஞ்சொல்வோம்
பாற்றிபசிசாவில் பதங்கமிறங்கிடும்
கோத்திரமிந்த குலத்தைவிளம்புகிறோம்
தீற்றியசாதிபத்திரி திராவகந்தானே (௫௰௭)

தானேதந்தநோய்க் கண்டமனிதர்க்கு
வானேதாம்பூலத்தில்வகையாய்தின்னவீய்ந்தால்
மானேமடிந்திடு மதந்தநோயெல்லாம்
கானேயகன்று கதிகெட்டுமாளுமே (௫௰௮)

## குஷ்டத்துக்கு-லிங்கதயிலம்,

மாள இனியின்னம் மறைபுறோம்யாருநீ
தாள்புங்கம்வித்துச் சங்குடன்சிற்றண்டம்
கேளேவினியின்னம் கெஞ்சாவின்வித்துடன்
காளேமனோசிலைக் கர்ப்பூரம்லிங்கமே (௫௰௯)

லிங்கமவ்வளவுக்கு நிறைபலம்அஞ்சதாய்
வங்கமுஞ்சேர்த்து இடித்துநாளாக்கிடு
தங்கமிதற்கொப்பேறு தானிதுவுண்மைதான்
பங்கமில்லாவகை புாண்டத்தில்போட்டிடே (௩௪௰

போட்டபின்சட்டிப் பொருந்தவேமூடிநீ
காட்டதேதமரு கதிர்போலசெய்திடு
வேட்டக்குழிதனில் வெண்கலயமிட்டு
பூட்டுமேல்பாண்டத்தைப் பொருந்தவேமண்ணிடே (௩௪௧)

பொருந்தஎருவை பொடியாயடுக்கி
தெரித்தமட்டந்த திவ்விகலயத்தில்
வருந்தமனேயணி வாழ்க்கையைப்பூசிடு
அறிந்துஅநுதினம் ஐஞ்ஞூறுவுருவேற்றே (௩௪௨)

ஏற்றியபின்பு இறங்குந்தயிலந்தான்
தோற்றியசாடியில் துடுக்கென்றடைத்திடு
பாற்றியமென்ன பாருப்பொப்பிதாகுமாம்
நேத்திரநோய்கள் புழுவெட்டுவெண்குட்டமே (௩௪௩

குஸ்டம்பெருமபுண் குலைநோய்ஐயமும்
சிஸ்டநரை சிக்கினவர்க்கும்
பக்ஷபாம்பாலனைய் பருவமுமெய்தும்பார்
இஸ்டமாயியம்ப என்னால்முடியுமோ (௩௪௪)

முடியும்வகையை முறைமுறையாகவே
கெடியாயுரைத்தோம் கீர்த்தியுண்டாகநாம்
பிடியேவகையைதான் பிரபலமாக்கிடும்
நெடியமாமுந்நூறும் நேசித்துப்பாருமே (௩௪௫)

பார்க்கவேயொன்று பகருவோங்கேளு
தீர்க்கமாமெந்நூல் செப்பிடுமுண்மைதான்
வார்க்கவேஅசுவனி வளமையிந்நூலிது
தார்க்கவேயொன்மொழி தபோயலனெப்துமே (௩௪௬

## கருத்தயிலம்.

எய்தவேயின்னம் இயம்புறேன்கேட்டிடு
கொய்தவேமேகையுங் கெந்தியுஞ்சேர்த்து
மெய்தவேயொன்றாய் மிலாவவேகொய்துநீ
கைதவேகுப்பியில் கடுகஅடைத்திடே (௩௪எ)

அடைத்திடுதிங்க ளானபின்கேளுநீ
படைத்திடும்பாலன் பிறக்குமதுதனில்
அடைத்திடுமேல்குப்பிய தனடுச்சில்லிடு
கடைத்தெழுநல்லகீழாய் கட்டிடுபாண்டமே (௩௪அ)

பாண்டமதுதனில் பயிறையுங்கொட்டிடு
வேண்டேநீசவம்விட்டு மேல்சட்டிதான்
கோண்டையில்வாசி குடிபோகாமூடிடு
ஆண்டையில்வெட்டியடுப்பதில்வைத்திடே (௩௪௯)

வைத்தபின்சாமம் வகையாயெரித்திடு
தத்ததில்முத்துத் தயிலமிறங்கிடும்
கைத்திடுமிந்த கருத்தயிலமிதை
பத்திரமாக பரையைத்தொழுதிடே (௩௫0)

தொழுகஅயச்செம்பு ஒருபங்குவெள்ளிதான்
கழுகவுருக்கிக்காசெடைக்குத்திடு
பழிச்செனஎட்டரை பழுக்குஞ்சத்திபமிது
அழுகவேவேண்டாம் அயச்செம்பைத்தேடிடே (௩௫௧)

## வாலுழுவை தயிலம்

தேடிடுவாலுழுவையுஞ்சீரகம
காடிடுக்கருசனக் கானகசீரகம்
வாடிடவேண்டாம் வார்த்திடுதயிலம்
பாடிடுநீத்துப் பாக்களவேற்றிடே (௩௫௨)

ஏற்றிடஎன்றால் இயப்பவுங்கூடா
பாற்றிடபாண்டு பறங்குபின்குஷ்டமும்

நேத்திரசூலை நெடுஞ்சொறிவேட்டையும்
காற்றிடமேகக் கரப்பனுங்கிரந்தியே, ௩௫௩

கிரந்திவகையெல்லாங் கெடிகெட்டோடிடும்
தெரிந்துநாம்சொன்னோம் திறமுள்ளபிள்ளைகாள்
வரிந்துகொண்டேகி வையகந்தன்னிலே
பரிந்துமேபண்டிதம் பார்த்திடுமக்களே. (௩௫௪)

பார்த்திடஇந்நூல் பாடினோமுன்மொழி
தோத்திரமாக தொருப்பையறிந்திடு
சேர்த்திட்டோமிந்நூல் செய்கையினாலேதான்
வாய்த்திட்டமோட்சம் வகையாகஎய்துமே (௩௫௫)

எய்துமாம்யோகம் எளிதோஎளிதல்ல
எய்துமாஞ்சித்தி யெவர்க்குமரிதல்ல
எய்துமாம்வேத சிலாக்கியமொன்றுதான்
எய்துமாமந்த எளிதையியம்பினோம். (௩௫௬)

சேங்கொட்டைதிராவகம்.

இயம்புறேன்கேளு இனியொன்றுமைந்தா
இயம்புறேன்பூத கரப்பனுஞ் * சேங்கோட்டை
இயம்புறேன்காயலூர் வெல்லமுஞ்சிங்கிதான்
இயம்புறேன்தண்ணீர் இரண்டுபடியதே, (௩௫௭)

* சேங்கோட்டை சேரான்கொட்டை.

இரண்டதாய்க்கொண்டு இடித்துஉலர்த்திடு
வரண்டயில்வாலை திராவகம்வாங்கிடு
குரண்டையில்சீசா கொட்டியடைத்திடு
திரண்டதுதிராவகம் திவ்வியமாகுமே, (௩௫௮)

ஆகுமாஞ்சர்நிகள் அலர்சந்நிதீசந்நி
வாகுமாம்வைய சீதளசேத்துமம்

தேகுமேதொண்டைக் கம்மலும்விம்மல்தான்
ஏகுமேயெல்லா மிதனருள்பார்த்திடே, (௩௱௮௰௯)

பார்த்திடு இந்நூல் பழியொன்றுமில்லைதான்
காத்திடுநெஞ்சன் கைலையுங்கிட்டும்பார்
வேற்றுமையில்லை வெளிச்சமிந்நூலிது
சாத்திரேமுண்மை சத்தியந்தானிதே. (௩௱௯௰)

சத்தியமாகநாம் சாத்திடமுந்நூற்
சத்தியமென்ன சஞ்சலமற்றிடும்
சத்தியமிந்நூல் சமிசைமில்லைதான்
சத்தியவயித்திய ரத்தினமுற்றே, (௩௱௯௰௧)

## சிமிட்டுரத்தினச்சுருக்கம்

முற்றிற்று.

௯௮-ம்-பக்கம்-௨௫௨-௨௫௩-வது,செய்யுள்களில்-ரவுத்திரகாளிகி யாமளத்திற்சொல்லிய பொருண்மேலோர்க்கன்றி விள்ளாமையாலுரைத்திலம்,

௯௮-ம்-பக்கம்-௰௮-வரி-௨௫௮-வது-செய்யுளில்பாரே அறுகம்ள ள-வல்லின மிடையின நெடிலெதுகையும் உயிர்வல்லின குறிலெதுகையும் பிறழ்ந்திருக்கிறது,

௯௮-ம்-பக்கம்-௩௰-வரி-௨௯௰-வது-செய்யுளில் இடி-படி-வடி-ஒரு ஒள-கடையடியிலிடையினவெதுகை பிறழ்ந்திருக்கிறது-சொல்லும்பொருளு மிசைந்திருக்கையான் ஞானிகளாலினுங் குற்றஞ்சொல்லக்கூடாவென-பண்டிதாள் மன்னிக்கவும.

உ

கடவுள் துணை.

# அவிஷதங்களின் அகராதி.


| பெயர். | பக்கம். |
|---|---|
| அஷ்டகணத்திற்கு-பால சஞ்சீவிமாத்திரை | 39 |
| ஆமகணம் | 8 |
| உப்புதிராவகம் | 79 |
| உலோகசெந்தூரம் | 70 |
| உளீமாந்தக்கெண்ணெய் | 32 |
| ஊதுபாந்தம் | 7 |
| எக்ஷிதோஷம் | 20 |
| ஷை தோஷம் | 24 |
| ஷை மோஷம் | 58 |
| எழூவகைதோற்றக்குறிப்பு | 20 |
| ஓமதிராவகம் | 79 |
| கணசுரத்துக்குஏலாதியுண் | 36 |
| கணத்துக்குசூரியபுடஅன் | 56 |
| கணத்தெண்ணெய் | 56 |
| ஷை எண்ணெய் | 56 |
| கணம் | 1F |
| கரப்பான்எண்ணெய் | 34 |
| கருங்கிரந்திசெங்கிரந்தி | 24 |
| கருத்தயிலம் | 84 |
| கருநீலக்கியாழம் | 62 |
| கலியாணிலேகியம் | 43 |
| காந்தாதிக்கியாழம் | 61 |
| காப்பு | 3 |
| குங்குமப்பூலேகியம் | 45 |
| குடல்வாதத்திற்கும்-உரம்விடிதற்கும்-துவாலையிடதயிலம் | 63 |
| குஷ்டத்துக்குலிங்கதயிலம் | 82 |
| குழந்தைகட்குழிச்சனுக்குநெய் | 33 |
| குளிதோஷகுணம் | 57 |
| குளிதோஷநிவர்த்தி | 58 |
| குளிதோஷம் | 21 |
| குன்மம் 8 கருவிதம் | 64 |
| கொடியாம்பல்மகோதரம் நீராம்பல் - பாய்ச்சல் | 67 |
| குஷ்டத்துக்குரெவுத்திரகாளிகியாழம் | |
| சகலதோஷநிவர்த்தி | 27 |
| சதிபுருஷாள்தோஷம் | 63 |
| ஜாதிபத்திரிதிராவகம் | 82 |
| சிங்கியந்த கணத்துக்கு அமுர்தாதிகுளிகை | 10 |
| சிங்கிமார்தம் | 10 |
| குலிகணம் | 5 |
| செங்கிரந்தி | 17 |
| ஜெகஜாலமை | 75 |
| ஷை மை | 76 |
| சேங்கொட்டைதிராவகம் | 85 |
| சொறிகுஷ்டக்கரப்பான் | 31 |
| தலைமாந்தகுணம் | 59 |
| திரிலோகசெந்தூரம் | 30 |
| தீராதஅசாத்தியகருங்கிரந்தி | 17 |
| தீராததோஷம் | 26 |
| தாங்குபுள்தோஷம் | 26 |
| தோஷங்கள்வருவிதம் | 28 |
| நவநீதசெந்தூரம் | 74 |
| நவமூலத்துக்குமருந்து | 65 |
| நவலோகசெந்தூரம் | 71 |
| நாட்பட்டமார்தசுரம்வாதபித்தசேஷ்மங் கடந்தசுரம்களைல் காத்திற்கும்வில்வாதிமாத்திரை | 38 |
| நாமூல்தோஷம் | 15 |
| நீர்ப்புள்தோஷம் | 26 |

| பெயர். | பக்கம். | பெயர். | பக்கம். |
|---|---|---|---|
| நீர்மாந்தகுணம் | 58 | மாந்தத்துக்குவிழுங்குமாத் | 52 |
| நிலிப்பட்சியின்தோஷகு | 53 | மாந்தம்சுழிமாந்தம் கழிச்சல்மாந்தத்திற்சிக்கியம் | 51 |
| நூல் | 4 | மாந்தம் | 15 |
| பட்சிதோஷகுணம் | 57 | மிளகுதிராவகங் | 78 |
| பட்சிதோஷம் | 23 | மூக்குக்கணம் | 6 |
| பதிநெட்டுக்கரப்பான்எண் | 43 | மூட்டுதோஷம் | 22 |
| பதினெட்டுதோஷநிவர்த்தி | 54 | மூதண்டகியாழம் | 68 |
| பழஞ்சுரம்விடாகாச்சல் சந்நிக்கு ஏலாதியுண் | 35 | மூலகணம் | 14 |
| பறவைதோஷகுணம் | 57 | மோகநாதியெண்ணெய் | 48 |
| பறவைதோஷம் | 24 | மேதம் 20-க்குகிருதம் | 69 |
| பன்னிரண்டு வகைப்புல் தோஷமுமொன்பது வித்தோஷமும் | 27 | ரசச்செந்தூரமாத்திரை | 37 |
| பாலுண்ணுப்பிள்ளைகட்குசரங் | 53 | வங்கசெந்தூரம் | 72 |
| பால்கரப்பான் | 19 | வறட்புள்தோஷம் | 25 |
| புருஷதோஷம் | 23 | வாய்வுபிடிப்புக்குப்பற்று | 28 |
| மலவாயம் | 18 | வாலுழைவைதயிலம் | 84 |
| மற்சகேந்திரவாய்வு | 29 | விஷசந்நிசுரங்கட்கு விலாடியுண்டை | 36 |
| மாந்தஎண்ணெய் | 55 | விஷதோழமகந்நிமாந்தம் பித்தசுரம் வாந்திக்கு க்கஸதூரிமாத்திரை | 37 |
| மாந்தகிராணிமாந்தஇசிவு சோகைக்காமாலைக்குக்கி | 51 | விந்துஸ்தம்பலப் | 73 |
| மாந்தத்துக்குக்கருநீலிக்கி | 50 | | |